தமிழ் நிலம்

உலகத் தமிழின முன்னேற்றக் கழக வெளியீடு

சிறப்பாசிரியர்

பாவலரேறு பெருஞ்சித்திரனார்

கிழமை இதழ்

தொகுதி - 2 | தி.பி. 2015 கும்பம்-14 (26-2-84) விலை 0-65 காசு இதழ் எண்: 33 | பகுதி 8 10

மாபெரும் மக்கள் எழுச்சி தோன்றாமல்

நல்ல விளைவுகளையும் பொதுமைக் கொள்கையையும் மீட்டெடுக்கமுடியாது!

மதங்கள், சாதிகள், அரசியல்காரர்கள், செய்தித்தாள்கள், திரைப்படங்கள் இவற்றாலேயே நாடு சீரழிகிறது!

இவற்றிற்கு உடனடிக் கட்டுப்பாடுகள் தேவை!

உயர்ந்த பதவிகளுக்குச் சம்பளக் குறைப்பு வேண்டும்!

இப்பொழுது நாட்டில் நடைபெறும் அன்றாட அரசியல் கட்சிகளின் போராட்டங்கள் வெறும் நிழல் போராட்டங்களே!

பாவலரேறு கருத்துரை!

மக்கள் இப்பொழுது தீவிரமான கொடுமை உணர்வுகளுக்குப் பலவகையிலும் ஆட்படுத்தப்பட்டு வருவது பெரிதும் வருந்தத் தக்கதாக உள்ளது. இளைஞர்களிடையில் இனநல, நாட்டுநலச் சிந்தனைகள் மிகவும் குறைந்து வருகிறது. ஏழைமக்கள் அன்றாடத் தேவைகளுக்காக மிகவும் போராட வேண்டியிருக்கிறது.

நாட்டின் வருவாய்களையெல்லாம் கொடியவர்களும் ஏமாற்றுக் காரர்களும் குமுகாயக் கயவர்களும் முதலாளிமார்களுமே பங்கிட்டுக் கொள்கின்றனர். கொடுமைகளும் கயமைகளும் கொள்ளையடிப்புகளும் மிக வேகமாகப் பரவி வருவது நாட்டின் எதிர்காலத்திற்கு நல்லதன்று; அரசின் ஒட்டுமொத்த முயற்சிகளின் பலன்களையெல்லாம் மேனிலை மக்களே கூறுபோட்டுக் கொள்கின்றனர். நாலாந்தர ஐந்தாந்தர ஏழை மக்கள் அவற்றை அணுகுவதும் இயலாததாய் இருக்கிறது.

பன்றிகள் உழப்புகின்ற கிழங்கு வயல்களைப் போல், அரசியல்காரரர்கள் நாட்டின் அனைத்து நிலைகளிலும் புகுந்து உழப்பி வருகின்றனர். நல்ல பயிர்கள் பன்றிகளின் காலடிகளில் சிக்கி நசுக்குண்டு சிதைவதுபோல், மக்களின் நலக்கூறுகள் அவர்களால் அழிக்கப்படுகின்றன. அறிஞர்கள் எனப்படுவோரின் அனைத்து முயற்சிகளும் தந்நலன்களை அடியொட்டியே செய்யப் பெறுகின்றன. வாயில்லாப் பூச்சிகளாய் ஏழை மக்கள் அலைக்கழிக்கப்பட்டுச் சீரழிக்கப் படுகின்றனர்.

மதங்கள் அளவுக்கு மீறிப் பொதுமக்களை ஆட்சி செய்து வருகின்றன. இனவியல், பொருளியல், அரசியல் முதலிய அனைத்துத் துறைகளிலும் மதவியல் புகுந்து விளையாட முற்பட்டு விட்டது. சாதிகளின் கொடிய நச்சு வேர்கள் முதியவர்கள், அறிஞர்கள், இளைஞர்கள் அனைவரின் நெஞ்சங்களிலும் ஊடுருவி முளையிட்டுச் செழிப்பாக வளர்ந்து வருகின்றன. அரசியல் கட்சிகளும் அரசியல் தொடர்பற்றனவாய்க் கூறிவரும் அறிவியல், கலை, பண்பாட்டு அமைப்புகளும் சாதியங்களாலும், கள்ளப் பணங்களாலும் வளர்த்தெடுக்கப் பெறுகின்றன.

செய்தித்தாள்கள், இதழ்கள் என்பனபற்றிச் சொல்லவே தேவையில்லை. அவை ஆடிவரும் கூத்துகளுக்கு அளவேயில்லை. மக்களை அவை அன்றாடம் மூளைச் சலவை செய்து வருகின்றன. விளைநிலங்களில் பரவும் நச்சுச் செடிகளைப்போல், அவை மக்கள் மனங்களில் நச்சு விதைகளையே தூவி வருகின்றன: திரைப்படங்களோ காட்டாற்று வெள்ளம் கரைபுரண்டு ஓடி ஊர்களையும் நகரங்களையும் அரித்தெடுப்பது போல், பொதுமக்களின் குறிப்பாக இளைஞர்களின் அறிவு முளைகளை வளரவிடாமல் சீரழித்து வருகின்றன. இவ்வாறு மதங்கள், சாதிகள், அரசியல்கட்சிகள், செய்தித்தாள்கள் திரைப்படங்கள் இவற்றாலேயே நாட்டின் பெரும்பகுதி நலவளங்கள் சிதைக்கப்பட்டு வருகின்றன. இவற்றுக்கு உடனடியான கட்டுப்பாடுகளும் நெறிப்படுத்தல்களும் மிக மிகத் தேவை என்பதை அரசு உணர்ந்து கொள்ள வேண்டும்.

இவற்றுக்கிடையில் நாட்டின் உயர்ந்த பதவிகளில் உள்ள அதிகாரக் கும்பல்களின் ஆரவாரத்தனமும் சொகுசுத் தனங்களும் மட்டுமீறி மக்களை உறிஞ்சியெடுக்கின்றன. கையூட்டு, மடிப்பறிப்பு, கொள்ளையடிப்பு முதலியநடைமுறைகள் அலுவலங்களின் எழுதப்படா நெறிமுறைகளாகப் பின்பற்றப் படுகின்றன:

நல்லவை எல்லாம் தீயவாம்;
தீயவும் நல்லவாம்;
செல்வம் செயற்கு.
(375)

என்னும் திருக்குறளின் ஊழதிகாரக் குறளுக்கு உலகியற் பொருள் கொள்ளும்படி ஆகிவிட்டது.

இவற்றையெல்லாம் தாங்கள் ஒழித்துவிடுவதாகக் கூறி ஊரை ஏமாற்றும் அரசியல் கட்சிகள் நடத்தும் அன்றாடப் போராட்டங்கள், வெறும் நிழல் போராட்டங்களாகவே இருக்கின்றன. இவ்வனைத்தையும் ஒட்டுமொத்தமாக ஒழித்துக் கட்ட வேண்டுமானால் மக்கள் எழுச்சி — மாபெரும் புரட்சி ஒன்று வந்துதான் ஆக வேண்டும். அது தோன்றாமல் நல்ல விளைவுகளையும், பொதுமைக் கொள்கையையும் இங்கு மீட்டெடுக்க முடியாது! முடியவே முடியாது! அதைச் செய்வது யார் என்பதைத்தான் காலம் உணர்த்த இருக்கிறது!

உ.த.மு.க. கொள்கை உரவோர் முதல் பயிற்சி வகுப்புத்தொடர்

இடம் : அணைப்பட்டி (நிலக்கோட்டை வட்டம், மதுரை மாவட்டம்)

நாள் : தி.பி. 2015, விடை 8, (21-5-1984) முதல் தி.பி. 2015 விடை 17 (30-5-1984) வரை

நாள்	நேரம் மணிமுதல்/மணிவரை	உரைத்தலைப்பு	உரை நிகழ்த்துவோர்
விடை. 8, திங்கள் (21-5-84)	காலை 8—9-30	1. தமிழ் இலக்கண அமைப்பு	பேரா. அரங்கச்செல்வன், க.மு அரசினர் கல்லூரி, கோபி
	10—11 30	2. முதன் மாந்தவியல்	திரு. குழந்தைவேலன், க.மு, கல்வெட்டாய்வாளர்,
	மாலை 3—4-30	3. பாவேந்தரின் பாடல்கள்	புலவர். பொதிகைச் செல்வன்
	6—9-00	கலந்துரையாடல்	
விடை 9, செவ்வாய் (22-5-84)	காலை 8—9-30	4. தமிழ் இலக்கிய அமைப்பு	பேரா. காளிமுத்து, க.மு., கலை, பண்பாட்டுக் கல்லூரி,
	10--11-30	5. பழந்தமிழகம்	பேரா. கோ. தங்கவேலனார் க.மு இல. இ. மெய்.ப. (வரலாற்றுத் தலைமைப் பேராசிரியர், செந்தமிழ் மாநிலக் கல்லூரி, சென்னை)
	மாலை 3—4-30	6. பிற்காலத் தமிழகம்	
	6—9-00	நெல்லை, செல்வத்தாயம்மாள் வில்லிசைக் குழுவினர் வழங்கும், பாவலரேறு அவர்களின் 'ஐயை' வில்லிசை	
விடை 10, அறிவன் (23-5-84)	காலை 8--9-30	7. வரலாற்றிலக்கியம்	புலவர். கடலூர் மணிமாறன் திருக்குறள்மணி
	10--11-30	8. இனமுன்னேற்ற முன்னறிவோன் திருவள்ளுவப் பேராசான்	திரு ச.அரசிறைவன், அறி இ.
	மாலை 3—4-30	9. தற்காலத் தமிழகம்	தென்னவன்கோ, க.மு,
	6-9-00	கலந்துரையாடல்	
விடை 11, வியாழன் (24-5-84)	காலை 8—9-30	10. சமய இலக்கியம்	புலவர். சிவசங்கு
	10—11-30	11. தமிழினம்-தாழ்ச்சியும்-வீழ்ச்சியும்-மீட்சியும்	திரு இரணியன், க.மு.ப.இ,
	மாலை 3--4-30	12. எதிர்காலத் தமிழகம்-தமிழீழம்	ஈழவேந்தன்
	6—9-00	கலந்துரையாடல்	
விடை 12, வெள்ளி (25-5-84)	காலை 8—9-30	18. பாவாணர் மொழியியல் முயற்சிகள்	சொல்லாய்வறிஞர் ப. அருளி
	10—11·30	14. பெரியார் இனவியற்கொள்கை	புலவர் குமர. தன்னொளியன்,
	மாலை 3—4.30	15. தமிழியப் பொதுவுடைமை	மார்க்கிய அறிஞர். குணா
	6—9-00	கோட்டை இராவணன் வழங்கும் 'விடியலைநோக்கி'-நாடகம்.	
விடை 13, காரி (26-5-84)	காலை 8—9.30	16. எதிர்காலத் தமிழகம்-தனித்தமிழ்நாடு	புலவர் தமிழ்மாறன், க.இ,
	10—11,30	17. பழந்தமிழிசை	பேரா. வீ.ப.கா. சொல்லழகனார்
	மாலை 3—4.30	18. தமிழீழ விடுதலைப் போராட்டம்:	திரு. முகுந்தன், தலைவர் தமிழீழ மக்கள் விடுதலைகழகம்.
	6—9	கழக முதல்வர் பாவலரேறு அவர்களின் மொழியியற் சிறப்புரை.	
விடை 14, ஞாயிறு (27-5-84)	காலை 8—9.30	19. பழந்தமிழ் நாடகப்பாங்கு	பாவலர் தஞ்சைவாணன், க.மு, சென்னை.
	10—11.30	20. தமிழின் நாகரிகப் பரவல்	திரு. ந. முத்துக்குமரன், அறி.இ,
	மாலை 3—4.30	21. பழந்தமிழரின்போர்க்கலைகள்	பேரா. செயப்பிரகாசர்.
	6—9.00	கலந்துரையாடல்	
விடை 15, திங்கள் (28-5-84)	காலை 8—9.30	22. மொழியியல் கொள்கை	சொல்லாய்வறிஞர் ப. அருளி வணி. இ, க.மு, ச:இ.
	10—11.30	23. தமிழர் கலைகள்	திரு. அறவாழி
	மாலை 3—4 30	24. பாவலரேறு அவர்களின் இசைப் பாடல்கள் (விளக்கவுரை)	தென்மொழி நா. இளமாறன்
	6—9.00	கழக முதல்வர் பாவலரேறு அவர்களின் இனவியற் சிறப்புரை	
விடை 16, செவ்வாய் (29-5-84)	காலை 8—9 00	25. வாழ்வியல்	திரு மா. பூங்குன்றன், க.மு, தமிழ்ப்பல்கலைக் கழகம், சென்னை.
	10—11.30	26. தற்காலக் கலப்படஅரசியல்	தென்மொழி ப. முருகவேள்
	மாலை 3—4 30	27. பாவலரேறு அவர்களின் பாடல்கள் (விளக்கவுரை)	பேரா. அரசேந்திரன், க.மு, உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
	6—9.00	கல்லை, அருட்செல்வனின் 'இன்னுமா தூக்கம்?'	வில்லிசை அரங்கேற்றம்
விடை 17, அறிவன் (30-5-85)	காலை 8—9.30	28. இயல்பறிவியல்	பேரா. இல.க. இரத்தினவேல் க.மு,
	10—11.30	29. தமிழர் பண்பாடு	திரு இரா. பாவாணன், அறி. இ,
	மாலை 3—4.30	30. பாவலரேறு அவர்களின் கட்டுரைகள்	தென்னவன்கோ, க.மு,
	5—6.30	ஐயந்தெளிதல் : கலந்துரையாடல்.	
	இரவு 7—10.30	கழக முதல்வர் பாவலரேறு அவர்களின் நாட்டியற் சிறப்புரையும் நிறைவுரையும்	

வகுப்பு இடைவேளைகளில் பவானியில் நடைபெற்ற பாவலரேறு அவர்களின் பத்துநாள் திருக்குறள்—தொடர் சொற்பொழிவுகளும், உ.த.மு.க. தொடக்க மாநாட்டு இசை நிகழ்ச்சியும், பாவலர் தஞ்சை-வாணன் அவர்களின் "களம் கண்ட பாவலன்" நாடகமும் ஒலிபரப்பப்படும்.

பயிற்சிக் காலத்தில், பயிற்சிக்கு வருவோர் அனைவர்க்கும் உணவும் உறையுளும் இலவயமாக் வழங்கப்படும். பயிற்சியில் கலந்துகொள்வோர் அனைத்துச் செலவுகட்கும் பயிற்சிக்கு ஆகும் செலவுக் கட்டணமாக ஐம்பது உருபா முன்கூட்டியே அனுப்பித் தம் பெயர்களைக் கீழ்க்காணும் முகவரியில் பதிவு செய்து கொள்ள வேண்டுகிறோம். தொகைகள் பணவிடை வழியாகவே அனுப்பவேண்டும். நேரிலும் தரலாம். நன்கொடைகளும் வரவேற்கப் பெறுகின்றன.

தொடர்புக்கும் தொகை விடுப்பதற்கும்:
மா. பொழிலன், 'தமிழ்நிலம்'
சென்னை—600 005.

அன்புடன்,
தென்மொழி நா. இளமாறன்.
பயிற்சி வகுப்பு அமைப்பாளர்.

பயிற்சி வகுப்பு மேற்பார்வை: தென்னவன்கோ: துணைப்பொதுச் செயலர்.

மேனாள் சட்டப்பேரவை உறுப்பினரும் இனஎழுச்சி மறவருமாகிய திரு ஆ. முனியாண்டி. அவர்களின் திருமகனார் திரு. மு. அறிவழகன், க.மு, அவர்கள் பத்துநாளும் உணவு வழங்குவதற்கு அன்புடன் இசைந்துவுள்ளார் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

உலகத் தமிழின முன்னேற்றக் கழகம்

கொள்கை உரவோர் முதல் பயிற்சி வகுப்புத் தொடர்!

1. வரும் தி.பி. 2015 விடை 8 (21-5-1984) முதல் விடை 17 (30-5 84) முடிய, உலகத் தமிழின முன்னேற்றக் கழகம் தன் தொண்டர்களுக்கென முதல் பயிற்சி வகுப்பை, மதுரை மாவட்டம், நிலக்கோட்டை வட்டம், அணைப்பட்டி என்னும் ஊரில் நடத்தத் திட்டமிட்டுள்ளது.

2: மேற்கூறப்பெற்ற 10 நாள்களிலும், சிறந்த தலைப்புகளில் 30 பயிற்சி வகுப்புகளும், கழக முதல்வர் பாவலரேறு அவர்களின் 3 சிறப்புரைகளும், 5 கலந்துரையாடல்களும். 2 இசை நிகழ்ச்சிகளும் 1 நாடகமும், பின்காணும் அட்டவணைப்படி நடைபெறும்.

3. பயிற்சி நடைபெறும் ஊரும் இடமும் மிகச்சிறந்த இயற்கைச் சூழலிலும் வையை ஆற்றங்கரையிலும் நடைபெறும். பயிற்சி பெறுவோர்க்கு உணவும் உறையுளும் இலவயம். எனினும் பயிற்சிக்கு ஆகும் செலவுகளை ஈடுகட்ட பயிற்சி பெறவிரும்புவோரிடமிருந்து உருபா 50 மட்டும் பயிற்சிக் கட்டணமாகத் தண்டப் பெறுகிறது. கட்டணம் செலுத்திப்பதிந்து கொள்ளாதவர்கள் வகுப்புகளில் சேர்த்துக்கொள்ளப் பெறமாட்டார்கள். குறிப்பிட்ட எண்ணிக்கை உடைய பயிற்சியாளர்களே சேர்க்கப் பெறுவதால் பதிவுக்கு முந்துக:

4. வகுப்பில் நடத்தப் பெறும். உரைகளைக் கேட்க விரும்பும் பொதுமக்களும் பார்வையாளர்களும் ஒவ்வொருநாளும் நடைபெறவிருக்கும் அனைத்து வகுப்புகளுக்கும் உரு.2மேனி, பார்வைக் கட்டணமாகச் செலுத்த வேண்டும். இசை நிகழ்ச்சிகளுக்கும், நாடகத்திற்கும் பார்வையாளர்கள் நிகழ்ச்சி ஒன்றுக்குத் தனிக் கட்டணமாக உருபா 2 செலுத்துதல் வேண்டும். பயிற்சிக் கட்டணம் செலுத்திப் பதிந்து கொண்ட மாணவர்களுக்கு எந்தத் தனிக் கட்டணமும் தண்டப்பெறமாட்டாது.

5. பயிற்சிக்கு வர விரும்பும் தொண்டர்கள், அனைத்து முன்னேற்பாடுகளுக்கும் உகந்த வகையில், தம் விருப்பு இசைவையும், கட்டணம் உருபா 50-ஐயும் 15-4-84 குள் குறிப்பிட்ட முகவரிக்கு அனுப்பித் தரல் வேண்டும். அதற்குப் பின் வரும் கட்டணங்களும், விருப்பிசைவும் கண்டிப்பாக ஏற்றுக் கொள்ளப் பெறமாட்டா.

6. பத்து அகவைக்கு மேல் 13 அகவைக்குள்ள சிறுவர்களுக்கும் மாணவர்களுக்கும் பயிற்சிக் கட்டணம் உருபா 25- ஆகும். பத்து அகவைக்குக் கீழ் உள்ள சிறுவர்கள் தம் பெற்றோருடன் வரலாம். அவர்களுக்குக் கட்டணம் இல்லை. ஆனால் அவர்களை அழைத்துவரும் பெற்றோர் அல்லது உறவினர் முன் கூட்டியே அதன் விளக்கத்தைத் தலைமைக் கழகப் பொறுப்பாளர்க்குக் கட்டாயம் தெரியப்படுத்துதல்வேண்டும்.

7. விடுபட்ட அல்லது தேவையான பிற விளத்தங்கள் இனி வரும் தமிழ்நிலம், தென்மொழி இதழ்கள் வழியாகத் தெரிவிக்கப் பெறும்.

8. நிலைமைக்கும் தேவைக்கும் தக்கபடி வகுப்புத் தலைப்பும், பயிற்றாசிரியரும் மாற்றம் பெறலாம்.

கழக முதல்வர் கட்டளைப்படி,
தென்னவன்கோ. க.மு.
துணைப்பொதுச் செயலாளர்.
உ.த.மு.க.
'தலைமையகம்' சென்னை-5.
20-2-84

தொண்டர்கள் நல்ல வாய்ப்பை நழுவ விடவேண்டாம்

ஓய்ந்திடல் இல்லை,என் உள்ளமும்
உணர்வும் உயிர்ச்செறிவும் !
தேய்ந்திடல் இல்லை,என் விரல்களும்
தாளும்! திரிந்தலைந்து
சாய்ந்திடல் இல்லை,என் உடலும்;
எனவே சலிப்பிலனாய்
மாய்ந்திடல் வரையும உழைப்பேன்,
உரைப்பேன், மக்களுக்கே !

தமிழ் நிலம்

உலகத் தமிழின முன்னேற்றக் கழக வெளியீடு

சிறப்பாசிரியர்
பாவலரேறு பெருஞ்சித்திரனார்

தொகுதி-2 இதழ் எண் : 33 (26-2-84) பகுதி 8-10

திரைப்படங்களையும் படப்பிடிப்புகளையும் இரண்டு ஆண்டுகளுக்குத் தடை செய்யுங்கள்!

நாட்டைப் பலவகையாலும் அரித்துவரும், வலுவிழக்கச் செய்யும் கொடிய நச்சு நோய்களுள் முதலாவது திரைப்படமே! குளிர் நச்சுக் காய்ச்சலையும் கொடிய அம்மை நோயையும் இப்பொழுது ஒழித்துக்கட்டி விட்டோம் என்று பெருமிதப் பட்டுக் கொள்கிறோம். ஆனால் திரைப்பட மோக நோய் அளவுக்கதிகமாக நாட்டை அலைகழித்து வருவதை ஏனோ வளரவிட்டுக் கொண்டுள்ளோம்.

கலைகள் மாந்த மனங்களைக் களிப்புறச் செய்யும் வகையில் போற்றக் கூடியவையே! ஆனால் அவை அம் மனங்களையும் அறிவையும் தின்று அழிக்கின்றவாறு இக்கால் நாட்டை முழுவது மாக ஆட்கொண்டு வருகிறது: அதன் முன்னேற்ற விளைவுகளை ஒன்றுமில்லாமல் செய்து வருகிறது

அண்மையில் அறிஞர் மால்கம் ஆதிசேசையா ஒரு கருத்தை வெளியிட்டுள்ளார். கல்வி நிறுவனங்களை ஓர் இரண்டாண்டுக் காலத்திற்கு மூடிவைக்கச் சொல்லியுள்ளார். இதுபற்றி ஏறத்தாழ பதின்மூன்று ஆண்டுகளுக்கு முன்பே நாம் இதே கருத்தைப் பாடல் வழியாக வெளிப்படுத்தியுள்ளோம்!

படிப்பை நிறுத்துங்கள்! பள்ளியை மூடுங்கள்!
பண்பாட்டிற் குயிர் ஊட்டுங்கள் -- வெறும்
நடிப்பெதற்கு? — போலி நடையெதற்கு? — ஆடும்
நாடகத் திரை மாற்றுங்கள்! — (கனிச்சாறு
2-ஆம்தொகுதி. 83-ஆம்பாடல்)

— என்பது அந்தப் பாடல். நம் கல்வி நிறுவனங்கள் இப்பொழுது அறிவையோ, பண்பாட்டையோ, பொதுநலச் சிந்தனைகளையோ வளர்க்கப் பயன்படவில்லை, எனவே அவ்வாறு அன்றே துணிந்து எழுதினோம். ஆனால்,

நற்பொருள் நன்குணர்ந்து சொல்லினும் நல்கூர்ந்தார்
சொற்பொருள் சோர்வு படும்! (1046)

-- என்னும் குறள்மொழிக் கேற்ப, நம் கருத்தை அன்று எவருமே கவனிக்க வில்லை. இன்றும்கூட அறிஞர் ஆதிசேசையா கருத்து எடுபடாமற் போனாலும், விளம்பரமாவது பெறுகிறது. நம் கருத்துக்கு அந்தப் பயனும் இல்லை. இனி, கல்வி இவ்வாறு பயன் படாமல் போவதற்கு முழுமுதல் காரணம் திரைப்படங்களே!

இப்பொழுது திரைப்படங்களை வலிந்து கைப்பற்றிக் கொண்டிருப்பவர்கள் கலைஞர்களல்லர்! கொலைஞர்கள்! கொள்ளைக் காரர்கள்! சூதாடிகள்! கறபழிக்கும் நோக்கத்தில இயங்கும் கயவர்கள்! அவர்களனைவர்க்கும் திரைப்படம் ஒரு விளையாட்டுக் களமாக உள்ளது. அனைத்து மக்கள் மனங்களிலும் குமுகாய வளர்ச்சியை நசிவடையச் செய்யும் நச்சுணர்வுகளை அவற்றின் மூலம் எளிதாகப் பரப்பி விடுகிறார்கள், அப் பேயர்கள்! எனக்கு முதலமைச்சராகும் வாய்ப்போ அல்லது தன்னதிகாரமோ கிடைத்தால், அக் கொடியவர்களை அவ் வறிவியல் ஆக்கத் துறையிலிருந்து அப்புறப் படுத்தும் முயற்சியை உடனே மேற் கொள்ளுவேன்! அடுத்த தேர்தலைப் பற்றியோ, அவர்களின் எதிர்ப்புகள், போராட்டங்களைப் பற்றியோ ஒருசிறிதும் கவலைப் பட மாட்டேன்; அல்லது நான் கொலைசெய்யப்படுவதைப் பற்றியும்கூட அஞ்ச மாட்டேன்.

• ஆனால் இப்பொழுதுள்ள முதலமைச்சர்க்குத் திரைப்படங் களைத் தடைசெய்யும் எண்ணம் வருவது கடினம்! ஏனெனில் அவரே ஒரு நடிகர்! சுவரொட்டிகளை, முன்பு ஒருமுறை தடை செய்வதாகக் கூறிக் காலப் போக்கில் நழுவி விட்டார். அதற்கும் காரணம் இல்லாமல் இல்லை நாட்டில் ஒட்டப்படும் சுவரொட்டி களில் 60 விழுக்காடு அவருடையனவும், அவர் நடித்த படங்க ளுடையனவும், அவரின் கட்சியைச் சார்ந்தனவுமே ஆகும்.

இப்பொழுதுள்ள திரைப்படங்கள் பாலுணர்ச்சியையே அதிகமாக ஊட்டுகின்றன என்பது மட்டுமன்று; தவறான சிந்தனை களையே மக்களிடம் பரப்புகின்றன. சட்டங்களாலும் பிற நல்ல நடவடிக்கைகளாலும் ஏற்படும் பயனுள்ள விளைவுகளை இச் சிந்தனைகள் சுவறிக் கொள்ளுகின்றன. மாணவர்கள் படிக்கும் கல்வித்துறைப் பாடங்களைவிட நூறுமடங்கு இத்திரைப்பட நச்சுணர்வுகளே அவர்களைத் தாக்குகின்றன. அவற்றிலிருந்து அவர்களை மீட்டெடுப்பது மிகவும் கடினம்:

மேலை நாடுகளில் திரைப்படங்கள் இத்தனைத் தாக்கங்களை ஏற்படுத்தவில்லை: திரைப்படங்களுக்கு அங்கு மக்கள் மிகுதியாகப் போவதில்லை. வீடுகளில் படப்பதிவுகளின் (வீடியோ) ஆளுமை உள்ளது ஒருபுறம் உண்மைதான். ஆனாலும் திரைப்படங்களின் போலியான பொய்மையான கதை வாழ்க்கைகள் அவர்களை மிகுதியாகக் கவர்வதில்லை. மேலும் அங்கு (ஐரோப்பிய நாடு களில் சொல்லுகிறேன்; அமெரிக்க நாட்டிலன்று.) திரைப் படக் கொட்டகைகளின் முன்னர் தவிர, நகரின் வேறு எந்த இடத்திலும் திரைப்படச் சுவரொட்டியை மட்டுமன்று, வேறு எந்தச் சுவரொட்டியையும் பார்க்கவே முடியாது. ஊரிலுள்ள சுவர்கள் அவ்வளவு தூய்மையாக இருக்கின்றன! ஒழுக்கக் கேட்டையும் கூட, ஒரு நெறி முறைக்கு உட்பட்டே ஒரு நடை முறைக்குக் கொண்டு வந்திருக்கிறார்கள். (இங்கு அது மறைமுகமாகவும் மிகக் கொடுமையாகவும் நடத்தப் படுகிறது) அங்குப் பெரும்பாலும் பாலியல் கடைகளிலும் (Sex Shops), அது தொடர்பான பொத்தகக் கடைகள், காட்சிக் கடைகள் எங்கும் இளைஞர்களை மிகுதியாகப் பார்க்க முடியாது. நடுத்தர அகவையைத் தாண்டியவர்களைத்தாம் அங்கு மிகுதியாகப் பார்க்க இயலும். அவர்களிலும் மிகச் சிலரே அதுவும் ஒரு சிறு பகுதி நேரமே வந்து வேடிக்கை பார்த்துத் திரும்புகின்றனர்! மொத்தத்தில் சொன்னால் பாலியல் கோட்பாடும் அங்கு ஒரு பொழுது போக்கே!

ஆனால், இங்கு நடப்பதே வேறு! இங்குள்ள நிலைகள் இளைஞர்களை முழுவதுமாக இத்திரைப்படக் காட்சிகளிலும், கீழ்த்தர உணர்வுகளிலும் சாய்த்து விடுகின்றன. தேனில் விழுந்து சாகும் எறும்புகளைப் போல விரைவில் இவர்கள் அழிந்து போகிறார்கள். அங்குள்ள நிலையைத் தேனைச் சுவைக்கும் நிலையாகச் சொல்லலாம். எனவே இங்குள்ள நிலைகளுக்குத்தான் ஒரு முடிவு செய்ய வேண்டும்.

நம் நாட்டில் செய்ய வேண்டிய முயற்சிகள் எத்தனையோ உள்ளன. வாழ்வியல் முயற்சிகளுள் உழவியல், தொழிலியல், வணிகவியல் கூறுகளும், அறிவியல், அறிவுக் கலைகள் போன்ற கூறுகளும் நிறைவுற உருவாக்கம் பெற்ற பின்னரே, திரைப்படம். நாடகம் போலும் பொழுது போக்குக் கலைகளை வளர விட வேண்டும். அல்லாவிடில் அக் கலைகளுக்குக் கவர்ச்சியும் உணர்ச்சியும் மிகுதியாகையால், மற்ற அறிவு நிலைகளை அவை அழித்து விடக் கூடும். அல்லாவிடில் புறக் கணிக்கும்படி செய்துவிடக் கூடும். இக் கொள்கை ஐரோப்பிய நாடுகளில் மிகவும் திறம்படக் கையாளப் படுகிறது. மதம், பண்பாடு என்று பேசும் இந்நாட்டில்தான் இவ்வகையில் ஒரு கீழ்த்தரமான நடைமுறை உள்ளது என்பதை உணர்ந்து கொள்ளுதல் வேண்டும்.

ஆகவே, நம் நாட்டில் திரைப் படங்களையும் படப்பிடிப்பு களையும் ஓர் இரண்டு ஆண்டுகளுக்காகிலும் தடை செய்ய வேண்டும். அப்பொழுதுதான் நாடு உருப்படும்; நம் இளைஞர் களும் உருப்படுவார்கள்! முழுவதும் தடைசெய்ய விரும்பா விட்டாலும், அல்லது இயலாவிட்டாலும் கடுமையான சட்டங்களைப் போட்டு அவற்றைக் கட்டுப் படுத்தியாகிலும் வைப்பது இப்பொழுதைக்கு மிக மிக இன்றியமையாததாகும்.

உலகத் தமிழின முன்னேற்றக் கழகம்

தலைமையகம், சென்னை-5.

சிறப்புச் செய்தி

நம் உலகத் தமிழின முன்னேற்றக் கழகத்திற்கு இன்னும் பொதுச் செயலாளர் அமர்த்தப் பெறவில்லை: தகுதியான ஒருவரை இன்னும் தேர்ந்து கொண்டுள்ளேன். கிளைகளும் ஆங்காங்கே தொடங்கப் பெறுவதற்கான ஆர்வம் மிகுந்து காணப்படுகிறது. ஆனால் கிளைகள் அமைப்பை நிறுத்தி வைத்துள்ளேன்.

இதுவரை மாவட்டப் பொறுப்பாளர்கள், வட்டப் பொறுப்பாளர்கள் மட்டுமே அமர்த்தப் பெற்றிருக்கிறார்கள். அவ்வகை அமர்த்தமும் இன்னும் சிறு அளவில் எஞ்சி யிருக்கிறது. 300 பக்கம் உள்ள 'கொள்கை விளக்கமும் நெறி முறைகளும்' என்னும் சுவடியும் இன்னும் முழுமை பெற வில்லை. அது முழுமை பெற்றவுடன் அச்சு ஆகல் வேண்டும். அந்தப் பணியும் எச்சமாக உள்ளது:

பல வட்ட அமர்த்தங்களும் வேண்டுகோள் படிவங்கள் வந்தும் இன்னும் நடைபெறாமல், நிறுத்தி இருக்கின்றேன்:

ஒரு தொய்வு செயற்கையாக உள்ளது. அதை நான் நன்கு அறிவேன். மொத்தத்தில், இவ்வகை வினைப்பாடுகளில் சில செய்திகளைப் பற்றி இன்னமும் நான் சிந்தித்துக் கொண்டி ருப்பதுதான் அனைத்துத் தொய்வுக்கும் கரணியம்.

ஊக்கம் உடையான் ஒடுக்கம் பொருதகர்
தாக்கற்குப் பேருந் தகைத்து — 486
தூங்குக தூங்கிச் செயற்பால தூங்கற்க
தூங்காது செய்யும் வினை — 672

வெளிப்படையாகச் சொன்னால், நானேதான் கழக வளர்ச்சியை மெத்தனப் படுத்தியிருக்கின்றேன். அதற்கும் உள்முக, வெளிமுகக் கரணியங்கள் சில உண்டு: ஓர் எடுத்துக் காட்டாகச் சொல்வதானால், கழகக் குதிரையின் வேகத்தைக் குறைக்கக் கடிவாளத்தை நானேதான் இழுத்துப் பிடித்துக் கொண்டுள்ளேன். என் பிடிப்பைத் தளர்த்தினால் கழகக் குதிரை நான்கு கால் பாய்ச்சலில் மிக வேகமாக ஓடிப், பல செயல்களைச் செய்து காட்டும் என்று என்னால் கணிக்க முடிகிறது. அந்த வேகத்தை என்னால் கட்டுப்படுத்த முடியும்; ஆனால் தாங்க முடியாது எனவேதான் கழகத்தை மெதுவாக மிகவும் மெதுவாக நடத்திக் கொண்டு வருகின்றேன். சரியான அமைவு வரும் வரைதான் அக் கட்டுப்படுத்தம் இருக்கும்:

இவ்விடத்தில் ஓர் உண்மையை உங்களுக்குக் கூறுவது உங்களுக்கு மிக மகிழ்ச்சியையும் மிகுந்த நம்பிக்கையையும் தரும் என்று எண்ணுகின்றேன். நம் கழகத்தை மிகவும் வேகமாகப் பொதுமக்களிடத்தில் ஈடுபடுத்தினால், தமிழ் நாட்டில் உள்ள பிற இயக்கங்களை விட (அரசியல் இயக்கங் களையும் சேர்த்தே சொல்கிறேன்) மிகவும் விரைந்து பரவ வாய்ப்புள்ளது என்பதை முழுமையாக உணர்கின்றேன்.

அண்மையில் பல ஊர்களிலும் கண்ட இளைஞர்களின், நடுத்தர அகவையினரின், வேறு கழகங்களி லிருந்து அவற்றின் நடவடிக் கைகளால் உளஞ் சோர்வுற்றி ருப்பவர்களின், அரசியல் கட்சி வெறியினால் உந்தப் படாத வர்களின் உணர்வெழுச்சி களைக் கொண்டு இதனை எடை போட்டுக் கணித்தே சொல் கின்றேன். கடந்த கால நம் வரலாற்றை அறிந்தால், இவ் வகையாக நாம் முன்கூட்டியே கணித்துச் சொன்ன பல நடப்புகளில் ஒன்றாவது பிழை பட்டுப் போனதை ஒருவரும் காட்ட முடியாது. சான்றுக்கு ஒன்று சொல்கிறேன். 'தி.மு.க. அமைச்சர்களுக்கு ஓர் இறுதி எச்சரிக்கை' என்று நாம் எழுதிய தென்மொழி ஆசிரிய வுரையை எடுத்துப் படித்துப் பாருங்கள். இப்பொழுதுள்ள அவர்களின் அவல நிலை அப் பொழுதே எப்படிப் படம் பிடிக்கப் பட்டுள்ளது என்பது நன்கு தெரியவரும். 'முந்நிற நெடுங் கொடி முன்றிலும் சிதைக' என்ற வரியை நாம் எழுதியதற்குப் பின்னால், பேராயக் கட்சியின் கொடி இன்றுவரை கோட்டை யில் பறக்கவே இல்லை. இனி, ஏறவும் ஏறாது. இதை எதிர் காலம் உணர்த்தும். இது நிற்க.

இப்பொழுது, மிக இன்றி யமையாத ஒரு செய்தி பற்றி இதை எழுதுகின்றேன்.

செயல் முடுக்கத்திற்கு அடிப்படையாக இன்றிய மையாத ஓர் அமர்த்தத்தை இதன்வழி அறிவிக்கிறேன்.

அஃதாவது, நம் முழு அன்புக் கும், நம்பிக்கைக்கும், தேர்ச் சித் தகுதிகளுக்கும் உரிய. திரு. தென்னவன்கோ. க.மு; சமற், கல்வெட்டு (பட்) அவர்களைக் கழகத்தின் துணைப்பொதுச் செயலாளராக அமர்த்து கிறேன். அவர் அப்பொறுப் புக்கு முழுவதும் தகுதியுடைய வர் என்று கண்டறிந்த பின்பே இந்த அமர்த்தத்தைச் செய்து இருக்கிறேன். தமிழ் மொழி அறிவிலும், வரலாற்றறிவிலும் இலக்கிய இலக்கணப் பயிற்சி யிலும், அத்துடன் சமசுக்கிருத அறிவிலும் மிகவும் தேர்ச்சி பெற்றவர்; ஆங்கிலப் புலமை யும் வாய்ந்தவர். வரலாற்றுத் துறையில் முதுகலைப் பட்டமும் கல்வெட்டு ஆராய்ச்சியில் பட் டையச் சான்றிதழும் பெற்றவர்.

சிறந்த கதை, நாடக ஆசிரியர். தெளிவாகவும் பிழையின்றியும் தமிழையும், ஆங்கிலத்தையும் எழுதவும், பேசவும், உணர்வழுத்தத்துட னும் கருத்துச் செறிவுடனும் சொற்பொழிவாற்றவும் வல்ல வர். தொடக்கக் காலத்திலி ருந்தே 'தென்மொழித்' தொண் டர்; துணிவு மிக்கவர்; செய லாற்றல் வாய்ந்தவர்; தருக்க ஆற்றலுள்ளவர்; வீரமிக்கவர்; அழகிய கையெழுத்துள்ளவர்; அழுகாத நெஞ்சினர்; அன்பும், பிறருடன் இயல்பாய்ப் பழகும் பண்பும், ஒழுக்கமும் உள்ளவர்; நடுநிலை உணர் வுள்ள நெஞ்சினர்; நன்னெறி விருப்பினர்.

இக்கால அரசியல் கரவினை யும், தகிடு தத்த அரசியல் குமுகியல்தலைவர்களின் சூழ்ச்சி களையும் இனங்கண்டுணரும் ஆற்றல் வாய்ந்தவர். மக்கள் மேல் அன்பும், அவர்களுக் காகத் தம்மை ஒப்படைத்துத் தொண்டு செய்யும் வேட்கை யும், ஈக உள்ளமும். புரட்சிப் போக்கும் கொண்டவர். மொத்தத்தில் தென்மொழி வளர்த்தெடுக்க விரும்பிய முழுமைத் தமிழ் மொழி, இன,

(தொடர்ச்சி 8-ஆம் பக்கம்)

சாவுக்கஞ்சோம்!

— கன்னல் —

கங்கைவரை படையெடுத்தோம், வெற்றி கண்டோம்
    கடாரத்தை முறியடித்தோம், திரும்பத் தந்தோம்!
சிங்களரைத் தெற்குநோக்கி ஓட வைத்தோம்!
    செந்தமிழர் பரம்பரையைத் தோற்று வித்தோம்!
வெங்கொடுமை ஆரியரைத் தாக்கி அங்கே
    வெற்றிக்கொடி பறக்கவிட்டோம்! இன்றோ இங்கே
பங்காளிச் சண்டைகளால் நமக்குள் நாமே
    பாய்நாய்கள் போல்கடித்துப் பகைத்துக் கொண்டோம்!

•

முதல்மொழியைத் தோற்றுவித்தோம்! மாந்தன் கூட
    முழுமையுற்றான் தமிழ்நிலத்தில் என்று கூறும்
சிதறடிக்கும் பேச்சுகளால் பயனென் கண்டோம்?
    செந்தமிழர் ஒற்றுமைக்கு வழிகண் டோமா?
எதனாலும் தமிழர்க்குள் பிரிவி னைகள்
    இல்லாமல் இருக்கின்ற தமிழ்நிலத்தை
இதுவரைக்கும் தோற்றுவிக்க வழிகள் தேடி
    எப்பணிகள் நாம்செய்தோம்? இதனால் தாழ்ந்தோம்?

இனவுணர்வு இல்லாத தமிழர் இங்கே
    இருக்கும்வரை முன்னேற்றம் தமிழுக் கில்லை
எனஎண்ணும் தமிழர்களை இணைத்து வைத்தே
    இவ்வுலகில் தமிழ்நிலத்தைப் புதுக்கா விட்டால்
உணவுக்கும் வழியின்றிப் பிச்சை கேட்கும்
    ஒருநிலைமை உண்டாகும்! ஆடை யின்றிக்
கணக்கற்ற செந்தமிழர் வாழும் வாழ்வைக்
    கட்டாயம் மாற்றாமல் மடிந்தே போவோம்!

உலகத்துத் தமிழர்களை ஒன்று கூட்டும்
    உயர்பணியை மேற்கொள்வோம்! தமிழை மூச்சாய்
உலகெங்கும் பரப்பிடுவோம்! தமிழுக் காக
    உயிர்நல்கும் படையமைப்போம்! பதவி நோக்கில்
பலதமிழர் வாழ்வளித்து வாழு கின்ற
    பாழ்நிலைமை நீங்குதற்குப் பணிகள் செய்வோம்!
சிலநாட்கள் வாழ்ந்தாலும் தமிழுக் காக
    செயல்படுவோம்! வெற்றிகாண்போம்! வாழ்வுக் கஞ்சோம்!

'தமிழ்நிலம்' தாங்கிற்று... இனியும் தாங்கும்!

— பறம்பை அறிவன் —

பேயடியாய் மழைச்சாட்டை இறங்கிற்று ... பேரிடியாய் மக்களைத் துயரங்கள் தாக்கிற்று ... இயற்கையோடு போராடிய - வர்கள் ... மாந்தர்க்குள்ளும் போராட்டங்கள் நடத்தினர்கள் ... எத்தனை தாக்குதல்கள், முற்றுகைகள் மோதல்கள் அத்தனைக்கும் ஈடளித்த தமிழ்நிலமே ...

நீ தாங்கிய துயரங்கள், இன்பங்கள், ஏந்திய எண்ணங்கள், கனவுகள் உன்னை உயரத்தில் கொண்டு போயின; ஆனால், உன் நிலப் புதல்வர்கள் பள்ளத்தில் கிடக்கின்றனர்!

காலமெல்லாம் கண்ணீர் விடப் பிறந்தவர்கள் எங்கள் பெண்கள் ... அவர்களால் நாங்களும் கோழைகளாக்கப் பட்டோமா!, இல்லை. அவர்களின் பேறுகாலத்தில் சிந்திய அரத்தத் துளிகளால் எங்களின் புரட்சி மணம் - அரத்தவாடை - எங்களின் எதிரிகளை நினைவுபடுத்துகிறது ..! எங்களின் முன்னேற்றத்திற்குக் கருத்தடையானவர்களை கருத்துக்கும் இடையூறானவர்களை, நாங்கள் அப்புறப்படுத்தும் துப்புரவாளர் களானோம்!

களம்பல கண்டோம், காயம்பல பட்டோம் . . .
சாவுகள் . . . பிறப்புகள் யாவும் சமம் . . .
வாழ்க்கையே தொடரும் உண்மை . . .
இப்படித் தாங்கிய படிப்பினைகள்
தமிழ்நிலம் செய்த தவம் . . . .
தவம் தொடர்கிறது . . .
'தமிழ்நிலம்' . . . வாழ்கிறது . . .
கருத் தாங்கிய அன்னை . . .
மீண்டும் . . . பெறுகிறாள் . . .
பேறுகாலம் மறுபடி மறுபடி நடக்கும் . .
இந்த மாந்தர் வாழ்க்கையுள்ளவரை
தமிழ்நிலம் : . . கருத்தாங்கிப் பிறப்பிக்கும்!

நெல்லை (தெற்கு) மாவட்ட உ.த.மு.க. அமைப்புக் கூட்டம்!

தி.பி.2015 சுறவம் 15, (29.1.1984) ஞாயிற்றுக் கிழமை, காலை 10 மணிக்கு பாளையங்கோட்டை 'இரத்னா' உணவக மாடியில் நெல்லை(தெற்கு) மாவட்ட உ.த.மு.க. பொறுப்பாளர் அமைப்புக்கூட்டம் நடைபெற்றது. நெல்லை (வடக்கு) மாவட்டத்தலைவர் திரு த. கரிகாலன், வணி.இ., தலைமையேற்றார். தெற்கு மாவட்டச்செயலர் தென்னவன்கோ அனைவரையும் வரவேற்றார்.

அம்மன்புரம் புலவர் வே. தமிழ்மாறன், உ.த.மு.க. (வடக்கு) மாவட்டச்செயலர் அ. தமிழன்பன், கடையநல்லூர் உ.த.மு.க இரா. இளங்கண்ணன், பாளை வட்டச்செயலர் சிவந்தி.ப. பொற்செழியன், பாளை கோ. இராமன்,

செந்தமிழ்வில்லிசைக்குழு பாலாமடை அதியமான், நான்குனேரிவட்டச்செயலர் புலவர். தென்மாறன், நெல்லை நகரச்செயலர் ந. பொருநையன், நெல்லை மு. சாகீர் உசேன், பாளை அ. இளங்கோப்பாண்டியன், ஆகியோர் கருத்துரை வழங்கினர்.

இரா. சண்முகம், ச. குமரகுருபரன், செய்துங்கநல்லூர் பே. பால்ராசு, விளாகம் அ. செழியன், வல்லநாடு தங்கப் பாண்டியன், பெ. இரா. வெள்ளத்துரை, இராதாபுரம் உ.த.மு.க. வட்டச்செயலர் இளந்திரையன் ஆகியோரும் வந்திருந்து மாலை மூன்று மணிவரை கருத்துரை கேட்டு மகிழ்ந்தனர். கலந்துரையாடலும் சுவையாக நடைபெற்றது.

அனைவரின் கருத்துரைக்குப் பின்னர், கூட்ட அமைப் பாளரும், (தெற்கு) மாவட்டச் செயலருமாகிய தென்னவன்கோ, கழகமுதல்வர் பாவலரேறு ஐயா அவர்கள், தென்மொழி, தமிழ்ச்சிட்டு, உ.த.மு.க., தமிழ்நிலம் - இவற்றை எவ்வாறு தன் உயிர்க்கொள்கையென உருவாக்கி, உழைத்து, உலகத் தமிழினத்திற்கு உணர்வூட்டி வருகிறாரென்பதை அழகாக எடுத்துரைத்தார்

தலைவரின் வேண்டுகோளின்படி, நெல்லைநகர உ.த.மு.க. தலைவர் சு. தென்இளங்கோ அவர்களின் தந்தையார் திருமிகு. சுடலைமுத்து அவர்கள் 18.1.84 அன்று இயற்கையெய்தி யமைக்காக இரு நிமையம் அமைதி காத்து இரங்கல் தெரிவிக்கப்பட்டது. பின்னர் தலைமையேற்ற திரு.த. கரிகாலன் நிறைவுரை ஆற்றினர்.

தீர்மானங்கள் படிக்கப் பெற்றபின் வடக்குமாவட்டச் செயலர் திரு.அ. தமிழன்பன் நன்றி நவில. அமைப்புக் கூட்டம் சிறப்புற நிறைவடைந்தது.

தீர்மானங்கள் :

(1) தமிழ்நிலம், தென்மொழி. தமிழ்ச்சிட்டு ஆகிய நம் இதழ்களை ஒவ்வொருவரும் ஆளுக்குப் பப்பத்துப்படிகள் பெற்றுப் பலர்க்கும் தெரியும் வகையில் பரப்புதல் செய்ய வேண்டும்.

(2) வட்டப் பொறுப்பாளர்கள், மாவட்டப் பொறுப்பாளர் துணையுடன், ஊர்கள் தோறும் கிளைகள் அமைப்பதிலும், உறுப்பினர் சேர்ப்பதிலும் விரைவும் முடுக்கமும் கூட்ட வேண்டும்.

(3) கிளைகள் ஓரளவினதாக அமைக்கப் பெற்றவுடன் சூன் திங்களில் இரண்டாவது மாவட்ட மாநாட்டினைக் கூட்ட வேண்டும்.

(4) திங்கள்தோறும் ஓர் ஊரில் செயற்குழுக்கூட்டம் அமைத்து, ஆங்காங்குக் கொள்கை விளக்கப் பயிற்சி வகுப் புகள் - கூட்டங்கள் நடத்தப் பெறல் வேண்டும்

(5) பொதுக்கூட்டங்களின் இறுதியில் "ஐயை" - வில்லிசை போலும் கலைநிகழ்ச்சிகள் ஏற்பாடு செய்யப் பெறலாம்.

(6) தமிழ்நாட்டுப் பள்ளிகள் தோறும் "தமிழ்ச்சிட்டு" பரவும் வகை செய்தல் வேண்டும்.

(7) தமிழ்நிலம், தென்மொழி ஆகியவற்றில் வெளிவந்த முகாமையான செய்திகளை - கட்டுரைகளைத் துண்டறிக்கை களாக அச்சிட்டுப் பொதுமக்களிடம் பரப்ப வேண்டும்.

(8) விடுபட்டுள்ள பொறுப்புகளில் தக்காரை அமர்த்தும் செய்யும் பணியில் வட்டப் பொறுப்பாளர்கள் ஈடுபட வேண்டும்.

(9) புலவர் தமிழ்மாறன் அவர்களையும், தென்னவன்கோ வையும் கூட்டங்களுக்கு அழைத்துப் பயன் பெறலாம்.

வருந்துகிறோம்

பாளையங்கோட்டை வட்ட உ.த.மு.க. செயலர் சிவந்தி ப பொற்செழியன் அவர்களின் தந்தையார் 30.1.84 அன்று காலை இயற்கையெய்தினர் அவர் மறைவுக்காக வருந்தும் குடும்பத்திற்கும அன்பர்களுக்கும் எங்கள் ஆறுதலைக் கூறிக் கொள்கிறோம்.

— அமைச்சர்.

இளித்தவாய்த் தமிழனுக்கு இடமில்லை! (இரண்டு செய்திகள்)

இந்திய அரசின் அஞ்சல் துறை 1984-ஆம் ஆண்டு 36 - புதிய அஞ்சல் தலைகளை வெளி யிட எண்ணியுள்ளது. இந்தி யாவில் உள்ள பாலங்கள் பற்றி இரண்டு தலைகளும், பூக்களைப் பற்றி நான்கு தலைகளும் இவற்றுள் அடங்கும்,

மேலும், (டாக்டர்) பர். இராசேந்திர பிரசாத், மங்கள் பாண்டே, நானா சாகிப், தந்தியா தோபே, பேகம் ஹசராத், சி.டி. பிர்லா, பி.வி. பிரத்கான், சுவாமி ஹரிதாசு, வாசுதியா பல்வந்தபகடே, பாபாகான்சிராம் - ஆகியோர் உருவம் கொண்ட அஞ்சல் தலைகள் வெளியிடப்பெறுமாம்.

இந்த 36-தலைகளிலும் தமிழகத்தைச் சேர்ந்த ஒரு வருக்குக்கூட இடமில்லை என்பது கண்டிக்கத்தக்கது.

புரட்சிப் பாவலர் பாரதி தாசன் - நினைவாக அஞ்சல் தலை வெளியிட வேண்டும் என்று புதுவை மாநில அரசும், தமிழக அரசும் நீண்ட கால மாக வேண்டுகோள் விடுத்தும் பலனில்லை என்பது குறிப்பிடத் தக்கது.

O

தேசிய ஒற்றுமை பேசும் திருடர்களால் புதுதில்லியில் ஏற்பாடு செய்யப்பட்ட 'இந்தியக்குடியரசு விழாவிற், கென பலகோடி உருவாக்கள் செலவழிக்கப்பட்டது நாம் அறிந்ததே!

தமிழக ஏழை மக்களின் அடிவயிற்றைச் சுரண்டிப் பிழைக்கும் அக்கயவர்கள் அவ் விழா விளையாட்டு - நடன ஊர் வலத்துள் தமிழக அணி யினரை இடம் பெறவிடாது - நரித்தனமாக தவிர்த்த நிலை இளித்தவாய்த்தமிழர்கள் உணர வேண்டியது!

— காட்டிக்கொடுப்போன்

இரண்டு இலக்க மக்கள் கொண்ட சிறியநாடு விடுதலை பெற்றது!

ஆசியக் கண்டத்தில் இந்தோனேசியா அருகில் உள்ள புருனி - என்னும் சிறிய நாடு இம் மாதம் முதல் நாளன்று ஆங்கிலேயர் (வெள்ளைக்காரர்களின்) ஆட்சி யிலிருந்து விடுதலைபெற்றது.

கடந்த 95-ஆண்டுகளாக இந்த நாடு ஆங்கிலேயரின் ஆளுமையின் கீழ் இருந்தது. ஓர் இலக்கத்து தொண்ணூற்று மூவாயிரம் பேர்களே வாழும் இச்சிறு நாட்டில், பெரும் பாண்மைபானோர்மலாய் இனத்த வரும்,சீன இனத்தவருமேயாவர்.

ஆசியக் கண்டத்திலேயே செல்வச் செழிப்புள்ள நாடு இதுவே ஆகும். இங்கு கன் நெய்யும் (பெட்ரோல்), எரி வளியும் (Gas) ஏராளமாக கிடைக்கின்றன. நாள் ஒன்றிற்கு ஏறத்தாழ ஓர் இலக்கத்து எழுபதாயிரம் பீப்பாய்களில் கன்நெய் எடுக்கப்படுகிறது.

இதனால் தனி ஒருவரின் வருமானம் ஏறத்தாழ ஈரிலக் கத்து20- ஆயிரம உருவா ஆகும்!

இன்னமும் எத்தனை யாண்டுகள் தமிழர்

அகம் கரியார்

— தமிழவேள்

5. குறளா? கீதையா?

‘இந்நாட்டிலே ஒருசிலர் தமிழில் புலமை பெற்றுத தமிழால் வயிறு வளர்த்தும், தமிழால் பொருள் ஈட்டியும் தமிழால் எல்லாச் சிறப்புகளையும் அடைந்தும், அதனைப் பாராட்டாமல், வடமொழியில் அகர உகரம் அறியா திருப்பினும் அதனையே சீராட்டியும் பாராட்டியும் வருகின்றனர். கம்பராமாயணச் சொற்பொழிவு என்று வாளா பெயர் வைத்துக் கொண்டு வான்மீகநாதருக்கு ஏற்றங் கூறிச் செல்வார் பலர். திருவள்ளுவர் திருக்குறளைப் பற்றிக் கூறப் புகுந்து மனுவின ‘அநீதி’க்கும் அமைவு உரைப்பார் சிலர். தெலுங்கு, கன்னடம் முதலிய மொழிகளை ஆதரிப்பதில எல்லாக் குலத்தாரும் ஒரே தன்மையான விருபபமுடையவராக இருக்கின்றனர். ஆனால் தமிழுக்கோ என்றால் பார்ப்பனர் மெல்லென நழுவி விடுகின்றனர். இதற்குக் காரணம் தமிழ் வடமொழியை அடியோடு ஏற்றுக் கொண்டு அடிமையாகாமல் தனித்து நிற்கும் ஆற்றல் உண்மை அவர்க்கு அழுக்காற்றை விளைத்தலே ஆகும். அந்தோ! இவ செய்கை கொடுமையினும் கொடுமை!” என்று கூறுவார் மணி. திருநாவுக்கரசு அவர்கள். அவாதம் கூற்று இன்றளவும எவ்வளவு மெய்யாய் இருக்கின்றது என்பது எண்ணிப் பார்த்தால் விளங்காமற் போகாது.

தமிழ் நூல்கள் எழுதியும் தமிழ்ச் சொற்பொழிவுகள் ஆற்றியும் நன்றாக வாழ்ந்து வரும் ஒருவர் எழுதிய ஆராய்ச்சி முன்னுரையுடன் திருக்குறள் ஆராய்ச்சிப் பதிப்பு ஒன்று வெளிவந்துள்ளது.

அந்த ஆராய்ச்சி முன்னுரையில், “பல மொழிகளில் மொழி பெயர்க்கப் பெற்ற பெருமையுடையது திருக்குறள்.”-என்று அவர் சொல்லியிருக்கிறார். அந்த அளவோடு நின்றிருந்தால் அவரைத் தமிழர் என்று ஒப்புக் கொள்ளலாம். ஆனால் அடுத்து என்ன சொல்கிறார் தெரியுமா? “பாரத நாட்டில் எழுந்த நூல்களில் பகவத் கீதைக்கு அடுத்தபடியாக இதுவே பல மொழிகளிலும் ஏறியிருக்கும் சிறப்புடையது என்று சொல்லலாம்.” குன்றிமணியின் மூக்குப்புறம் தெரிகிறதல்லவா?

இந்திய நாட்டில் எழுந்த நூல்களில் முதலிடம் பெறத்தகுந்தது-முதலிடம் பெற்றிருப்பது திருக்குறள் தானே தவிர பகவத்கீதையன்று. உலக மக்கள் அனைவரும் ஒப்புக் கொள்ளத் தகுந்த உயர்ந்த அறநெறிகளைக் கூறுவது பகவத்கீதை அன்று, திருக்குறள்தான். அமைதிக்கான நோபல்பரிசுபெற்ற அறிஞர் ஆல்பர்ட்டு சுவைட்சர் இந்தியாவில் எழுந்த நூல்களையெல்லாம் படித்து விட்டு, “இந்தியச் சிந்தனையும் அதன் வளர்ச்சியும்” என்று ஒரு நூல் எழுதியுள்ளார். அந்நூலில் திருக்குறளைப்பற்றி அவர் குறிப்பிடுகிறார் : “இத்தகைய வானளாவிய மெய்யுணர்வு பொதிந்த முதுரைத் தொகுப்பை உலக இலக்கியத்திலேயே காண முடியாது என்று சொல்லிவிடலாம்” என்கிறார். பகவத்கீதையையும் படித்துவிட்டு ஓர் அயல்நாட்டுக்காரர் திருக்குறளைப்பற்றிச் சொல்லியுள்ள உண்மை இது. ஆனால் தமிழர் என்று சொல்லிக் கொண்டு தமிழால் வாழந்து கொண்டிருப்பவரோ ‘பகவத்கீதைதான் முதலிடம் பெறுகிறது’ என்கிறார். கருத்துச் சிறப்பால் மட்டுமன்றிப் பல்வேறு உலக மொழிகளில் மொழி பெயர்க்கப் பட்டுள்ள பெருமையிலும் திருக்குறளே முதலிடம் பெறுகின்றது. என்றாலும் அவர் அதனை மாற்றிச் சொல்கிறாரே! அத்தகையோரிடத்தில் போய் தமிழ்இன உணர்வை எப்படி எதிர்பார்ப்பது?

இன்னும் அவருடைய ஆராய்ச்சி வடமொழிக்கு எப்படியெல்லாம் ஏற்றம் தர முயல்கிறது என்பதையும் கொஞ்சம் பாருங்கள்!

“வடமொழியில் உள்ள மரபுகளை இவர் (திருவள்ளுவர்) ஆள்கிறார். கேடு இல்லாதவனை அருங்கேடு அருங்கேடன் என்பதும், கேடின்மையை அருஞ்செவ்வி என்பதும் செவ்வியின்மையை அருஞ்செவ்வி என்பதும் இதற்கு எடுத்துக்காட்டுகள்!’

“நாண் என்னும் நல்லாள், நிலமென்னும் நல்லாள்-என்பன ‘லச்சா,’ ‘தாரா’ என்று பெண் பாலால் அவற்றைக் கூறும் வடமொழிவழக்கைத் தழுவியவை” என்பாரும் உளர்!

“வடசொல்லும் தமிழ்ச் சொல்லும் இணைந்த தொடர் ஒன்றை இவர் அமைத்துள்ளார். ‘அதிநுட்பம்’ ‘ஒருவர்தம்’ என்பன அவை. இவற்றில் முறையே அதி என்னும் முன்மொழியும் அந்தம் என்னும் பின்மொழியும் வடசொற்கள்!”

அருங்கேடன் அருஞ்செவ்வி என்னும் சொற்கள் வடமொழி மரபைப் பார்த்துத் தோற்றுவிக்கப் பட்டன என்பதையோ, நாண் என்னும் நல்லாள், நிலம் என்னும் நல்லாள் என்பன வடமொழி வழக்கைத் தழுவியவை என்பதையோ, அதிநுட்பம், ஒருவர்தம் என்பன வழி ஒட்டுடன் பிறந்த சொற்கள் என்பதையோ உண்மைத் தமிழ் அறிஞர்கள் ஒருபோதும் ஒப்புக் கொள்ள மாட்டார்கள். அவை உண்மையாகஇருந்தால்தாமே ஒப்புக்கொள்வதற்கு?

தமிழைக் காட்டினும் வடமொழியே உயர்ந்தது, என்று எண்ணுபவர்கள், தமிழில் வடசொற்களை எவ்வளவு மிகுதியாகக் கலந்து எழுத முடியுமோ அவ்வளவு மிகுதியாகக் கலந்துதான் எழுதுவார்கள். தனித்தமிழ்ச் சொற்கள் இருக்கும் போது அவற்றை விட்டு வடமொழிச் சொற்களையே கையாள்வார்கள். தனித்தமிழ் என்பது அவர்களுக்கு வேம்பாகவே இருக்கும்: பரிதிமாற்கலைஞர் என்று தனித்தமிழில் பெயர் வைத்துக் கொண்டாரே, அவரைக்கூடவா அப்படிச் சொல்வது என்று தமிழர் சிலரே கேட்கக் கூடும்.

வி.கோ. சூரியநாராயணசாத்திரியார் தனித் தமிழ் ஆர்வத்தினால் தம்பெயரை பரிதிமாற்கலைஞர் என்று வைத்துக் கொள்ளவில்லை. அந்தப் பெயரையே அவர்தம் நூல்களில் எல்லாம் போட்டுக் கொள்ளவில்லை. அவர்தம் கதை, நாடகநூல்களும் அவற்றில்வரும் கதை மாந்தர்தம் பெயர்களும் தனித்தமிழில் இல்லை. அவர்தம் நூலில் மொழி என்பதற்குப்பகரமாக ‘பாசை’ என்னும் சொல்லே கையாளப்பட்டுள்ளது. அவருடைய தமிழ், வடமொழி கலந்த கலப்புத்தமிழே! பின்னே அவர் எப்படி ஏன் பரிதிமாற்கலைஞர் என்ற ஒரு பெயரை வைத்துக் கொண்டார்?

“அண்ணா!”

“என்ன தம்பி?”

“சீனநாட்டுச் சிறுகதை ஒன்று.”

‘சொல் தம்பி?”

“ஒருபுலி காட்டுக்குள் இரைதேடிப் புறப்பட்டது. ஒருநரி அதன் எதிர்ப்பட்டது. புலியினிடமிருந்து தப்பித்துக்கொள்ள நரி ஒரு தந்திரம் செய்தது.”

“என்ன தந்திரம்?”

‘புலியாரே! நீர் என்னைக் கொல்ல முடியாது என்றது,நரி “ஏன்?” என்று கேட்டது புலி. ‘கடவுள் என்னை விலங்குகளுக்கு அரசனாகப் படைத்து அனுப்பியிருக்கிறார். நீர என்னைக் கொன்றால் கடவுளின் சினத்துக்கு ஆளாக நேரும், என்றது நரி.

“புலி அதனை நம்பி விட்டதா?’

“இல்லை,ஏளனமாகச் சிரித்தது. சிரித்த புலியைப் பார்த்து நரி, “என் சொல்லை நீ நம்பவில்லை போல் இருக்கிறது. என்னுடன் காட்டுக்குள் வாரும். என் சொல் எவ்வளவு மெய் என்பது தெரியும்” என்றது. புலியும் நரியும் ஒன்றாகக் காட்டுக்குள் சென்றன. புலியைக் கண்டு மற்ற விலங்குகள் ஓடி ஒளிவதைக் காட்டி, பார்த்தீரா, எல்லா விலங்குகளும் என்னைக் கண்டு ஓடுகின்றன!” என்றது நரி. நரியைக்கண்டு-தான் அவை ஓடுகின்றன என நினைத்து,புலி,நரியின் தலைமையை ஒப்புக் கொண்டது!”

‘நல்ல கதைதான்!”

“அந்தக் கதையில் வரும் புலிகளைப் போல் அல்லவா இன்னமும் தமிழர்கள் இருந்து வருகிறார்கள்!”

“எனக்குத் தெரியாது தம்பி!” — தமிழவேள்.

எந்தமிழ்இனம்உமை வாழ்த்தும்!

(பாவலர். தமிழ்க்குமரன், ஈரோடு)

வந்தவன் இங்கே வல்லாண்மை செலுத்த
மடியேந்தி நிற்கும் தமிழா!
இந்த இழிநிலை ஏதனாலென்று நீ
எண்ணிப் பார்த்ததும் உண்டா?
முந்துறு புகழை மொய்ம்பினை இழந்தாய்
மொழிநலம் மறந்ததனாலே!
நொந்திதற் காக வருந்துவாய் என்று
நூற்றாண்டிருபதில் கிளர்ந்தீர்!

அடிமைகளல்ல நாம் ஆண்டபேரினம்
அதைநீ மறவாதே என்று
படிமிசை இன்று பலபடி தாழ்ந்த
பைந்தமிழ னுக்குணர்ச்சி யூட்டி
நடித்தூரை எத்தும் நரிகளை விரட்டி,எம்
நலன்கள் பேணியே ஈண்டு
விடிவெள்ளி யாக முகிழ்த்தெழுந் தீரே
விடுபடும் நாடுஉம் மாலே

வித்தூன்றி னீர்கள் விடுதலைப் பயிர்க்கு;
வீறுகொண் டெழுந்துமே தாங்கள்.
ஒத்த தறிந்தெம் உயர்வுக்காக
ஓயா துழைக்கும் சான்றோய்!
சொத்தை யல்ல தாங்கள் ஊன்றிய வித்து
தூய தங்களின் மனப்போல்
முத்தாய் விளையும் மொழியோடினமும்
முகிழ்ந்திந் நாடுமே மீளும்

தமிழ்நிலம் மீட்கத் தானை நடத்தும்
தன்னே, ரில்லாத மறவ!
உமிப்பதரோடத் தமிழ்ப்பகை நடுங்க
உலாவரும் பாவல ரேறே!
அமிழா உணர்வின் ஆக்கம் கண்டோம்
அடுபகை வீழும் திண்ணம்!
இமிழ்கடல் சூழ்ந்த ஞாலமிசை வாழும்
எந்தமிழ் இனம்உமை வாழ்த்தும்!

‘தமிழ்நிலம்’ நன்கொடைப் பட்டியல்!

(19-5-83 முதல் 31-1-84 முடிய)

1.	தென்மொழி ப. முருகவேள், சைதை	10-00
2.	செ. நடராசன், சென்னை-78	10-
3.	சி. டேனியல், திருநெல்வேலி	5-00
4.	அரு. இன்னரசி, தேவக்கோட்டை	6-50
5.	மூ. பரமசிவம், விளாமுத்தூர்	5-00
6.	இரணியன், கோவை	10-00
7.	கூ.சா. இராமலிங்கம், அவலூர்பேட்டை	5-00
8.	தமிழவேள், வைராகுடியிருப்பு	10-00
9	அ. ச. சுப்பு, தூத்துக்குடி	10 00
10.	காசிதாசன், மலேசியா	52-00
11.	பாவேந்தர் இராமலிங்கம், ஈரோடு	100-00
12.	வேங்கடேசன், நங்கமங்கலம்	5-00
13.	உதயகுமரன், திருச்சி	10-00
14.	இரா. பாவணன், புதுக்கோட்டை	50-00
15.	பழ. வீரன், மலேசியா	13-50
16.	கல்லை. பெருஞ்சித்திரன், மதுரை	25-00
17.	புலவர் அய்யாத்துரை, மதுரை	5-00
18.	இராமையா, மதுரை	5-00
19.	முத்தாவு, மதுரை	5-00
20	இராமசாமி, ,,	5-00
21.	புலவர் திருமலை மதுரை ,,	15-00
22.	திருவள்ளுவன், இராசசுத்தான்	125-00
23.	செல்வம், இராசத்தான்	25-00
24.	சூரியமூர்த்தி, ,,	25-00
25	புட்பராசு, ,,	25-00
26.	சி.ச. கருப்பையா, பார்த்திபனூர்.	10-00
27.	இரா. இராசேந்திரன், சென்னை-5	10-00
28.	ச. வேலவன். வத்தலக்குண்டு	5-00
29.	இமயநெடுஞ்சேரலாதன்,புதுக்கோட்டை	7-10
30.	குமர தன்னொளியன், வேலூர்	10-00
31.	இரா. சடகோபன், குடிபேற்றம்	10-00
32.	த. கரிகாலன், திருச்சி	10-00
33.	செங்கோட்டையா நல்லையா மலேசியா	10-00
34.	அறிவுச்செல்வன், துவரங்குறிச்சி	12-00
35.	வில்வநாதன், வெங்காலூர்	20-00
36.	செ. முருகன், வைராகுடி	10-00
37.	வீரபாண்டியன், ஈரோடு	10-00
38.	கா. இளமுருகன், பு. புளியம்பட்டி	3-11

இங்ஙனே உணர்வற் றிருப்பார்!



தென்மாவட்டங்களில் கழகக் முதல்வரின் சுற்றுச் செலவு!

ஐரோப்பியச் செலவுக்குப்பின்னல் தென் மாவட்ட நிகழ்ச்சிகளில் கலந்து கொள்ளவும், ஆங் காங்கு இயக்கங்களைக்! சட்டமைக்கவும், கழக முதல்வர் பாவலரேறு அவர்கள், கடந்த சுறவம் 19, (?-2-84) தென்மாவட்டச் செலவு மேற் கொண்டார்கள்.

அன்று பகல் 2 மணியளவில் முதன்முதல், தெ.ஆ. மாவட்டம் திருமுதுகுன்றத்தில் மறுநாள் 3-2-84 அன்று காலை நடைபெறவிருந்த திருமணங் களில் கலந்துகொள்ளத் திருமுதுகுன்றம் சென்றனர். சென்னையிலிருந்தே அவருடன், பர். அரசேந்திரன. அவர்களும் உடன் சென்றார். இருவரும் அன்று முன்னிரவு 8 மணியளவில் முதுகுன்றம் வந்தனர். அவர்களை அன்பர்கள் அர. சண்முகம் (க.இ), புலவர் பாவலர் இளஞ்சித்திரன் ஆகியோர் எதிர் கொண்டனர். முதல்வர் அவர்கள் தங்கியிருந்த அறையில் புலவர் மா. முத்துசாமி. க.மு,வழக்கறிஞர் க. மணிராசு வணி.இ, ச.இ ஆகியோர் வந்து அவர் களைக் கண்டு கருத்துகளைப் பரிமாறினர்.

1 கலைச்செல்வி – கந்தசாமி — வாழ்க!
செல்வமணி — உமையாள் — வாழ்க!

மறுநாள் (3-2-84) வெள்ளி காலை 9 மணி யளவில், திருமுதுகுன்றம், கொளஞ்சியப்பர் கோயில் திருமண மண்டபத்தில், பாவலரேறு அவர்களின் தலைமையில், வி. சாத்தமங்கலம் கோ. சொக்கலிங் கம் அவர்களின் மகள், செல்வி கலைச்செல்விக்கும் நாகலூர், த மி: வாரியம் வணிக உதவியாளர் செல்வன் கந்தசாமிக்கும், மகன் செல்வன் செல்வ மணிக்கும், ஆத்தூர் மருத்துவர் ப. சண்முகம் அவர் களின் செல்வி உமையாளுக்கும், தமிழ்த் திருமணங் கள்இனிதேநடைபெற்றன. சிதம்பரம் திரு. கிருட்டிண சாமி (திராவிடர் கழகம்)அவர்கள் முன்னிலை தாங்கி னர். புலவர் ஆறுமுகம் க.மு அறிமுகவுரை வழங்கினர். நிகழ்ச்சியில் புலவர் திரு. மா. முத்து சாமி க.மு. வரவேற்புரை வழங்கினர். பாவலரேறு அவர்களின் வாழ்த்துரைக்குப் பின்னர் இராசிபுரம் தொகுதிப் பாராளுமன்ற உறுப்பினர் திரு பி. தேவ ராசன் வ.இ;ச.இ; இரா. சின்னத்தம்பி, திரு கிருட் டிணசாமி (திராவிடர் கழகம். சிதம்பரம்) திரு. மு. செல்வராசு (முன்னுள் ச.ம.உ.), திருவாளர்கள் இரா. தியாகராசன் (சட்ட மன்ற உறுப்பினர்), சி. இராமநாதன் (முன்னுள் சட்ட மன்ற உறுப்பினர்) திருவாட்டி பேபி அம்மாள் (கமிழ்நாடு இந்திரா பேராயம்). இரா' தி. அரங்கநாதன், திரு. புலவர் பொன்னம்பலம், புலவர் முத்து அண்ணமலை ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர்கள். திரு கோபால கிருட்டிணன் அவர்கள் நன்றியுரைக்குப் பின் திருமணம் இனிது நிறைவுற்றது.

திருமணத்திற்குப்பின் பாவலரேறு பெருஞ்சித் திரனர் அவர்கள் நெய்வேலி புறப்பட்டார். அவருடன் பர். அரசேந்திரன், சுப. திருமாறன் ஆகியோர் உடன் சென்றனர். அங்கிருந்து 4-2-84 அன்று பிற்பகல் ஆசிரியர் தென்மாவட்ட நிகழ்ச்சி களுக்கென, முதலில் திண்டுக்கல் புறப்பட்டுச் சென்றார்.

2 திண்டுக்கல்லில் வழித்தங்கல்

தி: பி 2015 சுறவம் 21 (4-2-84) காரி இரவு 8 மணியளவில் பாவலரேறு ஐயா அவர்கள் திண்டுக் கல் பேருந்து நிலையம் வந்தடைந்தார். அங்குக் காத்திருந்த திண்டுக்கல் வட்ட உ.த.மு க. செயலர் கழராம்பன், மதுரை வடக்கு மாவட்ட உ.த.மு.க. செயலர் திரு தமிழ்ச்சுடர் மணிமுத்து, வேடசெந்தூர் வட்ட உ.த.மு.க. தலைவர்-புலவர் திரு. கல்லை. அருட்செல்வன் இலக்.இ. பழனி வட்ட உ.த.மு.க. செயலர் திரு ஒடவை ந' தமிழ்வேந்தன், நல்லை. அழகுபாண்டியண் க.மு, கா. பூண்டிமறவன் ஆகியோர் அன்பொழுக வரவேற்றனர்; 'கோமத்' தங்கும் விடுதிக்கு அழைத்துச் சென்றனர். அங்கு ம. தங்கவேலு, சா. தமிழன்பன், மு. சங்கரன், வே இளமாறன் ஆகியோரும் இயக்க நிலைகள், கழக முயற்சிகள் ஆகிய பற்றிக் கலந்துரையாடிச் சென றனர்.

மறுநாள் சுறவம் 22 (5-2-84) ஞாயிறு அன்று பெரியகுளம் வட்ட உ.த.மு.க. தலைவர் திரு. கல்லை பெருஞ்சித்திரன், செயலர் புலவர் திரு. வேலவன் இல: இ, திரு கயிலை. வி. அரசெழில் க.மு, பெ.சி.ப., திரு யா. பன்னீர்ச்செல்வம், திரு. செல்லப்பாண்டி யன், திரு. சோ: ஆதிமூலம், திரு: மோகன்ராம், திருவாட்டி. வி. இராசம்மாள்மோகன்ராம், (தமிழா சிரியை), அரசுமகளிர்கல்லூரிப் பேராசிரியை சுப. இலக்குமி ஆகியோர் வந்து கண்டு உரையாடி மகிழ்ந்து சென்றனர்.

திண்டுக்கல்லிலிருந்து, சுறவம் 23 (6-2-84) திங்கள் பிற்பகல் 2-15 மணியளவில் நெல்லை மாவட்டம் நோக்கிப் புறப்பட்டார். அவரோடு வேடசெந்தூர் வட்ட உ.த.மு.க. தலைவர் புலவர். திரு. கல்லை அருட்செல்வன் இல, இ, உடன் சென்றார். அவர்களை திரு. கழராம்பன், திரு. ஒடவை. ந. தமிழ்வேந்தன் ஓவியர் திரு. கணேசன் ஆகியோர் வழியனுப்பி வைத்தனர்

3 உ. த. மு. க., கடையநல்லூர்.

7-2-84 அன்று இரவு கடையநல்லூர் உ.த.மு.க. வின் சார்பில், கீழை ஐரோப்பிய நாடுகளுக்குச் சென்று திரும்பிய உலகத் தமிழின முன்னேற்றக் கழகத்தின் முதல்வர் பாவலரேறு ஐயா அவர்க ளுக்குப் பாராட்டுவிழா நடைபெற்றது.

முதல்நாள் மாலையே கழக முதல்வர் அவர்கள் கடையநல்லூருக்கு வருகை தந்து திரு. வெற்றிச் செல்வனின் இல்லத்தில் தங்கி, அன்பர்களுடன் அளவளாவி மகிழ்ந்தார். அன்பர்கள் பலரும் தங்கள் உணர்வுகளை வெளிப்படுத்தியும், மேலைநாட்டுச் செலவுபற்றி உசாவியும், கேட்டும் மகிழ்ந்தனர்.

அன்று மாலை மழைபெய்து கொண்டிருந்தமை யால் சமால் தைக்கா உயர்நிலைப் பள்ளியில் பாராட்டுவிழா நடைபெற்றது. பேராயக்கட்சித் தொண்டரும், நல்ல தமிழன்பருமாகிய திரு. சேக்கிழார்கணேசன் தலைமையேற்க, மிகக் குறைந்த அளவிலே கூட்டம் கூடியது. தமிழ் வாழ்த்துடன் தொடங்க புலவர் இரா. இளங்கண்ணன் வரவேற் புரை நிகழ்த்தினர்.

தொடர்ந்து புலவர் குருபால்ராசு, திரு. அண்ணு பிச்சை, கடையநல்லூர் உ.த.மு.க. இரா. பாண்டி யன்,திரு. பழனி, நெல்லை(வடக்கு)மாவட்டச் செயலர் திரு. தென்னவன்கோ ஆகியோர் பாவலரேறு அவர்களைப் பாராட்டி மகிழ்ந்தனர்.

இறுதியில் கழக முதல்வர் பாவலரேறு பெருஞ் சித்திரனர் அவர்கள் ஏற்புரையாகத் தாம் மேலை நாடுகளில் பெற்ற உணர்வினைத் தமிழின மேம்பாட் டிற்குத் தக்கவாறு வெளிப்படுத்தி நிறைவுரை யாற்றினர்.

நன்றி நவில பாராட்டுவிழாக் கூட்டம் இனிதே நிறைவெய்தியது.

இரவு நெடுநேரம் அன்பர்கள் பலரும் ஐயாவிடம் உரையாடி இன்புற்றனர். மறுநாள் நெல்லைக்குப் புறப்பட்டனர்.

4 நெல்லை, பாளையங்கோட்டை
உ.த.மு.க. தொடக்கவிழா

8-2-84 அன்று காலை 8-30 மணியளவில் பாவல ரேறு அவர்களும், திரு. தென்னவன்கோ, திரு. அருட் செல்வன் ஆகியோரும், புறப்பட்டு அன்று பகல் 1-30 மணியளவில் நெல்லை பேருந்து வண்டி நிலையம் வந்தனர். அவர்களை திரு அ. வியனரசு, திரு: இரா மன் ஆகியோர் வரவேற்று பாலாசி தங்கும் விடுதியில் தங்கச் செய்தனர். அங்கு ஐயா அவர்களை திருவாளர்கள் க. இளந்திரையன், க.மு; கல். இ, (நெல்லை தெற்கு மாவட்டம், இராதாபுரம் வட்ட உ.த.மு.க. செயலர்) த. அன்பழகன் (நெல்லை தெற்கு மாவட்டப் பொருளர்). அதியமான் (செல் வத்தாயம்மாள் செந்தமிழ் வில்லிசைக் குழு ஆசிரி யர்.) அ. தமிழன்பன் (நெல்லை வடக்கு மாவட்டச் செயலர்), இரா. பாண்டியன் (நெல்லை வடக்கு மாவட்டப் பொருளர்), கா. பாலகிருட்டிணன் (ஆசிரியர்), பெருமாள் (தையலர்) இலெ. திருமுகம், பொருணையன் (நெல்லை நகா உ.த.மு.க. செயலர், சிவந்தி. ப. பொற்செழியன், (பாளையங்கோட்டை வட்டச் செயலர்), தேயோவான், சங்க. தமிழ்ச் செல்வன் (நாங்குநேரி வட்டச் செயலர்,) அ. வியன ரசு. (தலைமையக உதவியாளர்), புலவர். வேலவன் (ஆசிரியர். வத்தலக்குண்டு), இனநலவேந்தன் (அ. இளங்கோவன்), மா. இராசன் (க.இ), செ. பாசு கரன், ஆகியோர் வந்திருந்து கண்டு இயக்கத் தொடர்பாக உரையாடிச் சென்றனர்!

அன்று மாலை பாளையங்கோட்டை உ.த.மு.க. விழாவும், பாவலரேறு அவர்களின் தீந்தமிழ்த் துன்பியல் பாவியம் ஐயை—வில்லிசை அரங்கேற்ற மும் நடைபெற்றன. திறந்த வெளியில் நிகழ்வதா யிருந்த விழா, தொடர்ந்து பெய்த கடுமழையின் காரணியமாகப் பாளையங்கோட்டை மனகாவலம் (பிள்ளை) திருமண மண்டபத்தில் இடம் மாற்றம் பெற்று நிகழ்வதாயிற்று.

பகுத்தறிவு ஆசிரியரணியைச் சார்ந்த புலவ வே. தமிழ்மாறன் விழாவிற்குத் தலைமையேற்ருர்.

தமிழ்வாழ்த்துடன் விழா தொடங்கியது. விழாத் தலைவர் புலவர். தமிழ்மாறன் அவர்களின் தலைமை உரைக்குப் பின்னர், உறைத்த தமிழின எழுச்சி உரவோர் திரு. இனநல வேந்தன், திரு வியனரசு, நெல்லை (வடக்கு) மாவட்ட உ.த.மு.க. தலைவர் திரு. அ.தமிழன்பன், நெல்லை(தெற்கு)மாவட்ட உ.த.மு.க. செயலர் திரு. தென்னவன்கோ ஆகியோரின் உணர் வுரைக்குப் பின்னர் கழக முதல்வர் பாவலரேறு அவர்கள் உ.த.மு க. கொள்கை விளக்க நிறைவுப் பேருரை நிகழ்த்தி அமைந்தனர். தொடர்ந்து, பாவலரேறு அவர்கள் 1965-இல் சிறையிலிருந்த பொழுது படைத்தளித்த இன்றமிழ்த் துன்பியல் பாவியம் "ஐயை" — வில்லிசை கழக முதல்வரின் முன்னிலையில் அரங்கேறியது. ஆசிரியர் அதியமான் "ஐயை" — பாவியத்தை வில்லிசையாகப் படைத் தளித்தார். தச்சநல்லூர். திருவாட்டி. மு. செல்வத் தாயம்மாள் (திரவியத்தம்மாள்) செந்தமிழ் வில் லிசைக் குழுவினர் உயர்ந்த ஊர்ப்புற இசையில் வில்லிசை வழங்கினர்.

பாவலரேறு அவர்கள் வில்லிசையில் மகிழ்ந்து செந்தமிழ் வில்லிசைக்குழு நெறியாளர் ஆசிரியர் அதியமான் அவர்களிடம் கழகச் சார்பாக உரு.151ஐ அன்பளிப்பாக வழங்கினர்.

இரவு பன்னிரண்டரை மணியளவில் "ஐயை" வில்லிசை நிகழ்ச்சி மிகச்சிறப்பாக நிறைவடைந்தது.

5 செய்துங்க நல்லூர் உ.த.மு.க.

9-2-84 அன்று இரவு பாளையங்கோட்டை அருகிலமைந்துள்ள செய்துங் நல்லூரில் உ.த.மு.க. கிளைத் தொடக்க விழா நடைபெற்றது.

செய்துங்க நல்லூர் — கோவில்பத்து திரு. பால ரசன் (பால்ராசு) தலைமையேற்ருர்.

கல்லை. அருட்செல்வன் தமிழ் வாழ்த்துப்பாட விழா தொடங்கியது.

தொடர்ந்து, திருவாளன்மார் வியனரசு, இனநல வேந்தன், சங்க- தமிழ்ச்செல்வன், வேலவன், தென்ன வன்கோ ஆகியோரின் உரைகளுக்குப் பின்னர் உ.த.மு.க. முதல்வர் பாவலரேறு பெருஞ்சித்திரனர் அவர்கள் சிறந்த உணர்வு நிறைவுரையாற்றினர்கள். கழக முதல்வர் அவர்கள் வருகை தந்தபோது கண்டு கொள்ளாத மக்கள், கூட்டம் முடிந்தவுடன், சுற்றிச் சூழ்ந்து கொண்டு அன்புடன் அளவளாவி மகிழ்ந்தனர்.

செய்துங்க நல்லூர் மக்களிடம் பிரியா விடை பெற்று நகருந்தில் நெல்லைச் சந்திப்பை நோக்கி ஏகினர். ஊர்ப் பெரியவர்கள் முதல்வரிடம் பேரன்பு காட்டி வழியனுப்பி வைத்தனர்.

மறுநாள் நண்பகல் கழக முதல்வரும் கல்லை அருட்செல்வனும் திண்டுக்கல் செல்லவேண்டி வண்டியேறினர்.

6 நிலக்கோட்டை மேனிலைப்பள்ளி நிகழ்ச்சி

பாவலரேறும், திருவாளர்கள் தென்னவன்கோ, கல்லை- பெருஞ்சித்திரன், கல்லை- அருட்செல்வன், தென்மொழி நா -இளமாறன் ஆகியோரும் 13-2-84 பிற்பகல் திண்டுக்கல்லிலிருந்து புறப்பட்டு 1 மணி யளவில், நிலக்கோட்டை வந்தனர். அவர்களை ஆசிரியர் திரு வையைநம்பி (த. வையாபுரி), ஆசிரி யர் மு. அறிவுத்தொகையன் (ஞானசேகரன்) ஆகி யோர் வரவேற்று வழிப்போக்கர் தங்குமனைக்கு அழைத்துச் சென்றனர்.

[தொடர்ச்சி 7-ஆம் பக்கம்]

இந்தியாவில் தேர்தல்!

1947-ஆம் ஆண்டு இந்தியா உரிமை பெற்ற பின் நடந்த தேர்தல்களும், அவற்றில் ஒப்போலை யிட்ட மக்கள் எண்ணிக்கையும் வருமாறு:

1	1952 முதல் தேர்தல்	—	20	கோடிப்	பேர்
2	1957 2-ஆம் ,,	—	2	,,	,,
3	1962 3-ஆம் ,,	—	25	,,	,,
4	1967 4-ஆம் ,,	—	27	,,	,,
5	1971 5-ஆம் ,,	—	30	,,	,,
6	1977 6-ஆம் ,,	—	35	,,	,,
7	1980 7-ஆம் ,,	—	—		

பள்ளிப் பிள்ளைகள் இந்தி படிப்பதைக்

(6-ஆம் பக்கத்தின் தொடர்ச்சி)

அங்கு, திருவாளர்கள் ச. பாலுச்சாமி மாரி நிலவழகன், அ. இருதயசாமி, பா. வடமலை அரசு ஆகியோர் வந்திருந்து முதல்வரைக்கண்டு கருத்துரையாடினர். இவர்களுடன் மேனாள் சட்டமன்ற உறுப்பினர் ஆ. முனியாண்டி அவர்களும் வந்திருந்து பாவலரேறு அவர்களின் பணிகளை உளமாரப் பாராட்டினார்கள். திரு. ஆ. முனியாண்டி அவர்கள் 1965 இந்தியெதிர்ப்பு. அதற்குமுன் பெரியார் நடத்திய சட்ட எரிப்புப் போராட்டம் முதலியவற்றில் ஈடுபட்டு, இரண்டே முக்கால் ஆண்டு மதுரை, திருச்சி போன்ற சிறைகளில் இருந்தவர். திராவிட முன்னேற்றக் கழகத்தைக் சேர்ந்தவர். பட்டுக்கோட்டை அழகிரி சாமியினை பிறந்த ஊராகிய, மதுரை மாவட்டம் அலங்காநல்லூருக்கு அருகில் உள்ள வாவிசைமருதூர் என்னும் சிற்றூரில், தமது சொந்த முயற்சியால், நினைவுப் பள்ளியை நிறுவியும், தொடர்ந்து கடந்த 40 ஆண்டுகளாக மாசு மருவற்ற பொதுத்தொண்டில் ஈடுபட்டும், அவ்வட்டாரத்தில் பெரும் புகழ் பெற்றவர். அவர் முதல்வர் பாவலரேறு அவர்களைச் சந்தித்துப் பேசியதில் பெரும் மகிழ்ச்சியைத் தெரிவித்தார்.

மாலை 4 மணியளவில், நிலக்கோட்டை, அரசு மேனிலைப் பள்ளியின் இலக்கிய மன்றக் கூட்டம், பெருத்த மழையால், பள்ளிக்கு அருகில் உள்ள, சாந்தி மாணவர் இல்லத்தில் நடைபெற்றது. நிகழ்ச்சிக்கு மேனிலைப் பள்ளித் தலைமையாசிரியர் திரு. பாண்டியன் தலைமையேற்றார். மாணவர்கள் மாணிக்கவாசகமும், அன்பும் தமிழ்த்தாய் வாழ்த்துப் பாடினர். பள்ளித் தலைமையாசிரியர் திரு. ஆழ்வார் சாமி பாவலரேறு அவர்களை வரவேற்று உரையாற்றினார், அவர் தம் உரையில், பாவலரேறு அவர்களின் உரையைத் தாம் தஞ்சைப் பல்கலைக்கழகத்தில் அறிவியல் கருத்தரங்கில் கேட்டதாகவும், மருத்துவம் பொறியியல், பிற அறிவியல் துறைகளில் தமிழ் மொழியைப் பயன்படுத்துவது தொடர்பாக அவராற்றிய ஆய்வுரை மிகவும் சிறப்புடையதாக இருந்ததாகவும் மாணவர்களுக்குஎடுத்துக்கூறிநினைவு கூர்ந்தார். இன்றைக்குத் தனித்தமிழை வளர்க்கும் ஒரே பேரறிஞர், வழிகாட்டி என்றும், அவர் அப்பள்ளிக்கு வருகை தந்திருப்பது பெருமை மிக்க பேறு என்றும் மாணவர்களுக்கு அறிமுகப்படுத்தினார்.

அதன் பின்னர் பாவலரேறு மாணவர்களிடையில், அவர்கள் மகிழ்வும் மனமும் கொள்ளுமாறு 'தமிழ்-நேற்று, இன்று, நாளை' என்னுந்தலைப்பில் 1-15 மணிநேரம் அரிய ஆய்வுரை நிகழ்த்தினார். இறுதியில் திரு. ஆழ்வார் சாமியின் நன்றியுரையுடன் நிகழ்ச்சி நிறைவுற்றது.

பள்ளி நிகழ்ச்சிக்குப் பின் நிலக்கோட்டை, வழிப்போக்கர் விடுதியில் பாவலரேறு அவர்களைத் திருவாளர்கள் வேலவன், மு அ திருநாவுக்கரசு (தமிழாசிரியர்), சாமிவேல் சங்கரசுப்பு எ.சு.சு.இராமமூர்த்தி (தமிழாசிரியர்), சோலை தமிழன்பன் (தமிழ் இளைஞர் குமுகாய மறுமலர்ச்சி மன்றம்), கா.ப. இராதா மோகன் (நகர தி.மு.க. செயலர்) கணபதி (சிவகாமி அச்சக உரிமையாளர்) நல் இளஞ்செழியன் ஆகிய பலரும் வந்திருந்து கண்டு தங்கள் மகிழ்ச்சியையும், பாராட்டையும், வணக்கங்களையும் தெரிவித்துக் கொண்டனர்.

7 நிலக்கோட்டை ஊர்நல அலுவலர் பாலசுப்பிரமணியம் மறைவு.

அதன் பின்னர், பாவலரேறு அவர்களின் நிலக்கோட்டை நிகழ்ச்சிக்கு வரப் பெரிதும் முயன்றவரும், அவர் வந்த 13-2-84 நாளைக்கு முந்தின நாள் வரை. (நிகழ்ச்சியை அமைத்த நீண்ட நாளைய தென்மொழி அன்பரும் விற்பனையாளரும் தமிழ்ச்சிட்டு' இதழை அவ்வட்டாரத்தில் மாணவர்களுக்கிடையில் பெரிதும் அறிமுகம் செய்தவரும் ஆகிய) காரியாம் பட்டி ஆசிரியர் திரு த.வையை நம்பிக்குத் துணையாக இயங்கி வந்தவரும் ஆகிய திரு (மு. இளவழகன் (பாலசுப்பிர மணியன்) அவர்கள், வத்தலக்குண்டில் மறைந்து போனதற்கு. அக்குடுபத்தினர்க்கு நேரில் போய் இரங்கல் தெரிவிக்க விரும்பிய பாவலரேறு, மாலை 6-30 அளவில் வந்தலக் குண்டு புறப்பட்டார். அவருடன், அன்பர்கள் திருவாளர்கள் த.வையை நம்பி தென்னவன்கோ, கல்லை - பெருஞ்சித்திரன், கலலை- அருட் செல்வன், தென்மொழி ந.இளமாறன், சீதிருமலை வேலவன், ஆகியோரும் வத்தலக்குண்டு சென்றனர்:

வத்தலக்குண்டில் ஊர்நல அலுவலராகப் பணியாற்றியவர் மறைந்தவர் மு.இளவழகன் அவர்கள், 43, அகவை நிரம்பியவர் திடுமென மறைந்தது நம் இயக்கத்திற்குப் பேரிழப்பானது, பொதுநல உணர்வும், தனித்தமிழ் உணர்வும் கொண்டு விளங்கிய அவர் இறுதிநாள் வரை நம்மேல் அன்பும் இயக்கப் பணிகளில் ஆர்வமும் கொண்டு உழைத்து

* தமிழகத்தின் பெயர்ப் பலகைகள் இருமொழியிலோ, மும்மொழியிலோ அல்ல, தமிழ் மொழியிலேயே இருத்தல் வேண்டும்!

* இந்தியாவின் பிற மாநிலங்களில் தமிழர்கள் துன்புறுத்தப்படுவார்களேயானால், தமிழகத்திலிருந்து வேறு மாநிலத்தவர்கள் வெளியேற்றப் படுவார்கள்!

திருச்சி - இந்தி எதிர்ப்புப் பாசறைக் கூட்டத்தில் தீர்மானங்கள்!

சன. 22 — கடந்த சனவரித் திங்கள் 22-ஆம் நாள் திருச்சி தேவர் மன்றத்தில் 'அண்ணா கழகத்தின் சார்பில், மான்புமிகு அடியார் அவர்களால் 'இந்தி எதிர்ப்புப் பாசறை'க்கூட்டம்கூட்டப்பெற்றது. கூட்டத்திற்குத், திருச்சி மாவட்ட அண்ணா கழகப் பொருளாளர் தலைமை தாங்கினார். அண்ணா கழகத்தின் சார்பில் திருச்சி. முகவை, மதுரை மாவட்ட அமைப்பாளர்கள் பேச்சுக்குப்பின், அண்ணா கழகப் பொதுச் செயலாளர் திரு. இரா. திருமறவன் உணர்வொடு உரையாற்றினார்கள். திருச்சி மாவட்ட தி. மு. க. செயலாளர் திரு. எசு. கே. வடிவேலு அவர்களின் பேச்சுக்குப்பின, திராவிடர் கழகக் கொள்கைப்பரப்புச் செயலர் மானமிகு செல்வேந்திரன் அவர்கள் பேசுகையில், 'பாவலரேறு ஐயா அவர்கள் 25-ஆண்டுக்காலமாக அரசு ஆதரவு,செல்வ வலிமை, விளம்பரம் ஆகியன இல்லாத நிலையிலும் ஆற்றக்கூடிய தூய தமிழ்த் தொண்டு, எண்ணி வியக்கக் கூடியதும், பின்பற்றக் கூடியதும் ஆகும் என்றும், சோமசுந்தர பாரதியார், மறைமலையடிகள், திரு வி.க. போன்ற பல தமிழ் அறிஞர்களின் மொத்த உருவம் ஐயா அவர்கள் என்றும்,அவர்க்குத் தங்களைப் போன்றவர்கள் என்றும் துணையிருப்பார்கள் என்றும் வெகுவாக எடுத்துக் கூறிவிட்டு, இந்தி ஆளுமையினை வலுவாகக் கண்டித்து ஏறத்தாழ ஒருமணிநேரம் பேசினார்கள். இறுதியில் அடியார் அவர்கள் பேசுவதற்கு முன்பாக உலகத் தமிழின முன்னேற்றக் கழக முதல்வர் பாவலரேறு ஐயா அவர்கள் ஏறத்தாழ இரண்டரை மணிநேரம் அரிய பல செய்திகளை எடுத்துக் கூறிச்சொற்பொழிவு ஆற்றினார்கள்.

ஐயா அவர்கள் பேசுகையில் இந்திமொழியின் ஆளுமையை நாம் தெரிந்து கொள்வதற்கு முன் இந்தி மொழியின் வரலாற்றையும், தமிழின, தமிழ்மொழியின் தொண்மையையும் நீண்டநேரம் பல எடுத்துக் காட்டுகளுடன் விளக்கினார்கள். இந்தி மொழி நம் தமிழர்களால் ஏற்றுக் கொள்ளப்பெற்றால், நம் தாய் மொழி தமிழ் எங்ஙனம் சிதைந்து போகும் என, பல சொற்கள் திரியக்கூடிய பலுக்கல் முறையையும் எடுத்துக் கூறி, தமிழர்கள் இதனை ஏற்றுக்கொள்கிறார்களா என்று கூட்டத்தினரைப் பார்த்துக் கேட்டார்கள். கூட்டத்தினர் அந்நிலைக்கு வழிவிடோம் என உரக்க ஒலியெழுப்பினர். இறுதியாக ஐயா குறிப்பிடுகையில் இந்திமொழியின் ஆளுமையை எதிர்த்துக் கூட்டம் போடுவது, மாநாடு போடுவது போன்றவற்றால் இந்தித்திணிப்பு ஒழியப்போவதில்லை என்றும். நாம மிக விரைந்து அதன் தலையெடுப்பைத் தடுக்க வேண்டும். அல்லது தமிழகத்தைத் தனியே பிரிக்க வேண்டும் என்றும் வற்புறுத்தி அதற்கென உடனே செயலில் இறங்க வேண்டும் என்றும் எனவே அடியார் அவர்கள் இந்திமொழி ஆளுமை ஒழிப்பு நிலைக்காகவோ அன்றித் தமிழ், தமிழின விடுதலைக்காகவோ ஆன ஒரு போராட்டத்தை விரைந்து அறிவிக்க வேண்டும் என்றும் ஐயா அவர்கள் குறிப்பிட்டார்கள்.

இறுதியில் அடியார் அவர்கள் உணர்வுமிகு நிலையில், கன்னடத் திரைப்பட நடிகர் இராசகுமார் அவர்களின் ஆணவப்போக்கினை வலிமையாகக் கண்டித்துப் பேசிவிட்டு, அந் நடிகரின் கொடுங்கரிசன் (கொடும்பாவி) ஒன்றைத் தீக்கொளுத்தி எரியவிட்டார்கள்.

அடியார் அவர்களின் எழுச்சியுரைக்கு முன் கூட்டத்தின் தீர்மானங்கள், அண்ணா கழகப் பொதுச் செயலாளர் திரு. இரா. திருமறவன் அவர்களால் படிக்கப் பெற்றன. அத் தீர்மானங்கள் ஆவன!

தீர்மானங்கள்
தமிழ் பாதுகாப்புத் தொடர்பாக:

1. அண்மையில் தமிழக அரசு கொண்டு வந்த சட்டத்தின்படி தமிழகத்தில் உள்ள கல்விநிறுவனங்கள், தொழில் நிறுவனங்கள், வணிக நிறுவனங்கள் அனைத்திலும் தமிழ் மொழிக்கு முதன்மையும், முகாமையும் கொடுத்தும், விரும்பினால் பிற மொழிகளுக்குச் சிறுபான்மை இடமளித்தும் அறிவிக்கப்பட்டதை மறுத்துத் தமிழ் மொழிக்கே முதன்மையும் முகாமையும் முழுமையும் இடம் கொடுக்கவேண்டும் என்றும்.

தமிழகத்தில் உள்ள பெயர்ப்பலகை அனைத்திலும் தமிழ்மொழி ஒன்றே இருக்கவேண்டும். பிற மொழிஎழுத்துகள் எதுவும் இருக்கக்கூடாது, எனவும் இப்பாசறை தீர்மானிக்கிறது.

2: தமிழகத்தில் ஏறத்தாழ ஐம்பது ஆண்டுகாலமாகப் பல்வேறு போராட்டங்கள் இந்தியை எதிர்த்து நடத்தியும் இந்தி மேலும் மேலும் வலிந்து புகுத்தப் பட்டு வருவதை இப்பாசறை மிகுந்த வன்மையாகக் கண்டிப்பதுடன் இம்முயற்சி உடனே தடுத்து நிறுத்தப்படாவிடில் கடுமையான போரட்டங்களையும் விளைவுகளையும் மாநில, நடுவண் அரசுகள் சந்திக்க நேரிடும் என்றும் இப்பாசறை எச்சரிக்கை செய்கிறது

3. தமிழக அரசு இப்போது கடைப்பிடித்து வரும் இருமொழிக்கொள்கை ஒருபோலியான கொள்கை: தமிழ் மொழியைத் தவிர்த்துவிட்டுப் பிற மொழிகளிலே படிப்பதற்கு அரசு வாய்ப்புக்கொடுத்து வருவது கண்டிக்கத்தக்கது. எனவே இந்த நடைமுறையை அறவே கைவிட்டுவிட்டு இந்தியாவில் பிற மாநிலங்களில் அந்தந்த மாநில மொழிகளே கட்டாயப்பாடமொழியாக இருப்பதுபோல் தமிழகத்திலும் தமிழ்மொழியையே கட்டாயப் பாடமொழியாக ஆக்கச் சட்டம் கொண்டுவர வேண்டுமெனத் தமிழக அரசை இப்பாசறை வலியுறுத்தகிறது.

தமிழர் பாதுகாப்புத் தொடர்பாக

4. தமிழ் மொழியைத் தாய்மொழியாகக் கொண்ட தமிழர்கள் இந்தியாவின் பிற மாநிலங்களில் அமைதியாக வாழ்கிற நிலை கடுமையாகி வருகிறது. இந்த நிலை உடனே தடுத்து நிறுத்தப்பட வில்லையானால், ஏற்கனவே தமிழகத்தில் வாழ்ந்து வரும், பிற மாநிலத்தவரை இங்கிருந்து கட்டாயமாக வெளியேற்ற வேண்டி இருக்கும் என நடுவண் அரசை இப்பாசறை எச்சரிக்கை செய்கிறது.

5. தொடர்ந்து வரும் தமிழ் ஈழச் சிக்கலை இறுதியான தீர்வுக்குக் கொண்டுவர வேண்டுமானால். தமிழ் ஈழத்தைத் தனியாகப் பிரிப்பதே தக்கதாக இருக்குமென இப்பாசறை அழுத்தமாக வலியுறுத்துகிறது.

நள்ளிரவு பன்னிரண்டு பணி அளவில் அண்ணா கழக திருச்சி மாவட்டச் செயலரின் நன்றியுறைக்குப்பின் கூட்டம் இனிது முடிவுற்றது.

அரும்பணியாற்றினர். நம் வரவை நீண்ட நாள் விரும்பியிருந்தார். அவர்க்கு இரண்டு ஆண் பெண் குழந்தைகள் உண்டு அன்பர்களும் பாவலரேறும் அவர் வீடு சென்ற பொழுது கணவரைப் பிரிந்த துயரால் அவர் துணைவியார் ஆராத் துயரில் மயக்கமுற்றிருந்ததது பெரிதும் இரங்கத் தக்கதாக இருந்தது. அவர் குடும்பத்திற்கும் உற்றார் உறவினர்க்கும் 'தமிழ்நிலம்' சார்பாகக் கழக முதல்வர், அவர்கள் தம் ஆற்றாமையையும் இரங்கலையும் ஆறுதலையும் தெரிவித்துக் கொண்டார்.

முதல்வர் சென்னை திரும்புதல்:

அன்று, இரவு 11 மணியளவில் உடன் வந்த அன்பர்கள் அனைவரும் பாவலரேறு அவர்களை வழியனுப்பி வைக்க, மறுநாள் 14--284 பகல் 1மணியளவில் சென்னை அடைந்தார்.

செய்திகள்: தென்னவன்கோ.
கல்லை. அருட்செல்வன்.

மறைவுற்ற
நீண்ட நாள்
தென்மொழி அன்பர்
திரு. பாலசுப்பிரமணியம்
அவர்கள்.

கள்ளிப் பாலைக் குடிப்பதாய்க் கருதுக!

சில கொடுமையான செய்திகள்

பாரதிதாசன் ப. க. க. வில் கேட்கப்பட்ட செயலலிதா பற்றிய கேள்வி சரியே என்கிறார் அமைச்சர். அரங்கநாயகம்!

பாரதிதாசன் பல்கலைக் கழக வினாத்தாளில் அ.தி.மு.க. கொள்கை பரப்புச் செயலர் செயலலிதாவைப் பற்றிக் கேட்கப்பட்டதில் தவறு ஏதும் இல்லை என்றும், இக்கால வரலாறு பற்றிய தேர்விலேயே அக்கேள்வி கேட்கப்பட்டது என்றும், இதை முன்பே செய்திருக்க வேண்டும் என்றும், ஆளுநர் உரைக்குப் பின், அதன் மீது பேசிய தி.மு.க. உறுப்பினர் ரகுமான்கான் கேட்ட கேள்விக்கு, கல்வி அமைச்சர் அரங்கநாயகம் விடையளித்தார்.

இலங்கை வட்டமிசை மாநாட்டில் அமிர்தலிங்கம் கூட்டணியினர் கலந்து கொண்டது சரியாம்!

தற்பொழுது இலங்கையில் நடைபெறும் வட்டமிசை மாநாட்டில் கலந்து கொண்டு, ஈழத்தமிழர் சிக்கலுக்குத் தீர்வு காணும் அமிர்தலிங்கம் குழுவினர் செய்யும் முயற்சி சரியே என்று 63 உறுப்பினர்கள் கொண்ட கூட்டணிப் பொதுக்குழுவினர் ஒப்புதல் அளித்துள்ளனர்.

சிங்கள அரசுடன் தம் கூட்டணி பேச்சுரை நடத்தக் கூடாதென நூலமாத இறுதியில் எடுத்த தீர்மானத்தைக் கூட்டணியினர் மாற்றிக் கொண்டு, இவ்வாறு தெரிவித்துள்ளனர்.

ஈழத்தில் உள்ள தமிழ்ச் சிறுபான்மையினர் நலத்தில் இந்தியா கொண்டுள்ள அக்கறை(!)யும் நல்லெண்ணமும்(!)தாம், தங்களுடைய மனமாற்றத்திற்குக் காரணம் என்று அக்குழு தன் புதிய தீர்மானத்தில் குறிப்பிட்டுள்ளது.

கூட்டணி, தான் ஏற்கனவே செயவர்த்தன அரசுடன் ஒத்துப் போக வேண்டும் என்று கொண்ட முடிவை உடனடியாகச் செயல்படுத்தாமல், படிப்படியாக, மக்கள் மனங் கொள்ளுமாறு ஏற்கச் செய்ய வேண்டும் என்னும் தந்திர உத்தியைப் பொது மக்கள் இவ்வகையில் நன்கு விளங்கிக் கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறோம்.

என். டி. ராமராவ் இந்தி கற்கிறார்.

தெலுங்குதேசத் தலைவர், திரு. என்.டி. இராமராவ் தாம் பதவியேற்ற புதியதில் காட்டிய வீறாப்பிலிருந்து இப்பொழுது, பதவியைத் தக்க வைத்துக் கொள்ளும் நோக்கோடு சில புதிய நடைமுறைகளைக் கடைப் பிடித்து வருகிறார்.

தொடக்கத்தில், ஆந்திராவிலும், தில்லியிலும் தெலுங்கிலேயே பேசி வந்த இராமராவ் இப்பொழுது வடநாட்டுத் தலைவர்களை மகிழ்விப்பதற்காக, இந்தியில் பேச விரும்புகிறார். எனவே இந்திமொழியின் மீது அதிகப் பற்றுக் கொண்டுள்ளார் என்றும், இனி தில்லி போகும் பொழுதெல்லாம் இந்தியில் பேச உறுதி கொண்டாரென்றும், அதற்காக இந்தி ஆசிரியர்களை அமைத்து இந்தி படிக்கின்றார் என்றும் தெரிய வருகின்றன.

பாரதிதாசன் பல்கலைக் கழக ஆட்சிக்குழு (Senat)வில், அருவருப்புக் கதையாசிரியை சிவ சங்கரி இடம் பெறுகிறார்!

பாரதிதாசன் பல்கலைக் கழக ஆட்சிக்குழு (செனட்)வில், பச்சையான பாலியல் செய்திகளை எழுதி வரும் அருவருப்புக் கதையாசிரியை சிவசங்கரி இடம் பெற்றுள்ள செய்தி, மக்கள் நலம் கருதுவோர்க்கு மிக அதிர்ச்சிதரும் செய்தியாகும்.

13 உறுப்பினர்களைக் கொண்ட அக்குழுவின் தேர்வாளர்களைப் பாரதிதாசன பல்கலைக் கழகம் அண்மையில் தெரிவித்துள்ளது. அவர்களில் சிவசங்கரியும் ஒருவர் மற்றொரு பெண் உறுப்பினர் இசைப்பாடகி சேலம் செயலட்சுமியாவார்.

விலைமகளிர் கூட்டத்தில் பருவம் வராத தமிழ்நாட்டைச் சேர்ந்த சிறுமிகள் மிகுதியாக இடம் பெறுகின்றனர்!

நாடு முழுவதிலும் தொடர்பு கொண்டுள்ளதும் குமுகாய ஒழுக்கக் கேட்டிற்கு ஊக்கமளித்து வருவதுமான ஒரு கூட்டம், தமிழ் நாட்டிலிருந்து 9 அகவை முதல் 10 அகவை வரையிலுள்ள, பருவம் அடையாத சிறுமிகளை, ஆசை காட்டித் அழைத்துச் சென்று, பொது உடலுறவுக்கென, அவர்களைப் பம்பாயில் விலைமகளிர் வாழும் சிவப்பு விளக்குப் பகுதிகளில் 1000 உருபா முதல் 4000 உருபா வரை விலை போக்குவதாகப் பம்பாயில் உள்ள பார்சீ என்னும் பெண் செய்தியாளர் ஒருவர் தில்லி மீமிசை அறமன்றத்தில்(சுப்ரீம்கோர்ட்டில்)முறையிட்டுள்ளார்.

விலை மகளிர்களாகச் சிறுமிகள் ஈடுபடுத்தப் படுவதைத் தடுக்கவும், அவர்களுக்குச் சட்ட முழுமையான பாதுகாப்பு அளிக்கவும் செய்யவேண்டுமென்று, அப் பெண் செய்தியாளர் முறையிட்டுள்ளார். அவர் அம் முறையீட்டில், 'இத்தகைய சிறுமிகள் தமிழ் நாட்டிலிருந்தே கொண்டுவரப் படுவதாகவும், அதைக் கடந்த ஆண்டு பம்பாயில் பார்த்ததாகவும் குறிப்பிட்டுள்ளார்.

இம் முறையீட்டை ஏற்று, தில்லி மீமிசை மன்றம், அவ்வாறு விலைமகளிர்களாக ஆக்கப்பட்டுக் கொத்தடிமைகளாக வைக்கப்பட்டிருக்கும் அத்தகைய சிறுமிகளின் பட்டியலைத் திரட்டித் தருமாறு அச் செய்தியாளர்களைக் கேட்டுக் கொண்டிருப்பதுடன், தமிழ்நாடு, ஆந்திரம், கருநாடகம், மகாராட்டிரம் ஆகிய நான்கு மாநில அரசுகளுக்கும் இதுதொடர்பாகக் கூறும் குற்றச்சாட்டுக்கு விடையளிக்குமாறு கட்டளை பிறப்பித்துள்ளது.

இது போலும் கொடுமையான குற்றங்கள் இப்பொழுது மிக மலிந்து வருவது குறிப்பிடத் தக்கது.

தமிழீழ மக்கள் விடுதலைக் கழகத்தலைவர் முகுத்தன் அவர்களிடம் 'அசோக் இலேலண்ட்' தொழிலாளர்களின் பணமுடிப்பு வழங்கு விழா!

சென்னை-57: கடந்த 1-2-84 ஆம்பக்கல், அறிவன் கிழமை மாலை 3.45 மணி அளவில் உரத்த தென்மொழி அன்பரும், 'சென்னை மாவட்ட உ.த.மு.க. பொருளருமாகிய திரு. துரை-தென்னவன் அவர்களின் பெருத்த முயற்சியால் அசோக் இலேலண்ட் தமிழ் அன்பர்கள் கழகத்தின் சார்பில் தொழிற்கழகப் பொதுச் செயலாளர் திரு ஐயப்பன் அவர்கள் தலைமையில் தமிழீழ மக்கள் விடுதலைக் கழகச் செயலதிபர் திரு. உமாமகேசுவரன முகுந்தன். அவர்களிடம் உரு 5000 கொண்ட பணமுடிப்பு வழங்கப் பெற்றது.

த.ம வி.கழகம் வெளியிட்டிருந்த நாளிகை, மற்றும் நினைவுத் தலைகள் விற்பனைத் தொகையால மேற்படி உரு.5000 கொண்ட பணமுடிப்பு வழங்கு நிகழ்ச்சி 'அசோக் இலேலண்டு' வாயிலில் நடைபெற்றது. கூட்டத்தில் திரு. அன்புகுமார், புலவர், திரு. சானகிராமன், ஆகியோர் பேச்சுக்குப் பின் த.ம.வி.க. செயலதிபர் திரு. உமாமகேசுவரன அவர்கள் உரையாற்றினார்கள். இறுதியாக திரு. துரை-தென்னவன் நன்றியுரை நவின்று கூட்டத்தை இனிது முடித்தார்.

செல்வத்தாயம்மாள் செந்தமிழ் வில்லிசைக் குழு உறுப்பினர்கள் : கீழ் அமர்ந்திருப்போர். இடமிருந்து திரு. சங்கரன். இணைவிய(ஆர்மோனிய)க் கலைஞர். நடுவில் : புலவர். மு. செல்வத்தாயம்மாள், செந்தமிழ் வில்லிசைக் குழு, தச்சநல்லூர்
குடம் : (வலமிருந்து) இரா. சுப்பையா.
பின்புறம் : ச. முத்துக்கலுங்கு உடுக்கை அல்லது தண்ணுமை
கட்டை : தி. ச. முத்தையா; பா. பெருமாள் பல தாளம் (All rounds)
மேல் இருக்கையில் உள்ளவர் : திரு. அதியமான் (ஐயை பாவியத்தை வில்லிசை வடிவத்தில் எழுதியவர்) குழுத்தலைவர்.

(3-ஆம் பக்கத்தின் தொடர்ச்சி)

நாட்டு நலத் தொண்டர்களில் நன்கு வடிவான சிலருள் ஒருவர்.

அவரைத் துணைப்பொதுச் செயலாளராக அமர்த்துவதில் நான் தனிப்பட்ட முறையில் பெருமிதமும் பெருமகிழ்ச்சியும் நிறைவும் கொள்கிறேன்.

பொதுச் செயலாளர் அமர்த்தத்திற்கும் தக்க ஒருவரைத் தேடிக்கொண்டு இருக்கின்றேன். நல்ல அறிவுக் கூர்மையும், செயல் வல்லமையும், மனத் திரிபுணர்வின்மையும்; கொள்கைஉரனும், ஈகவுணர்வும், தந்நலமறுப்பும், நம்பிக்கையும் உள்ள ஒருவர்க்காகக் காத்துக் கொண்டிருக்கிறேன். இடையில் ஓரிரண்டு பேரை எண்ணி ஏமாறிப் போனேன். இனி, ஏமாற மாட்டேன். என்மேல் வேறு குறைகளைக் காண முடியாதவர்கள், என் நேரிய பண்பு நலன்களையும், தனி நிலைகளையும் பலவாறு திரித்துக் கூறிப் பொறாமை உள்ளத்துடன் பழிதூற்றி வருகிறார்கள். அவர்களின் மனவேக்காட்டில அவர்களே கருகிப் போகும் நாள் வரும் இறுதியில் அறம் வெல்லும்.

அன்பர்கள் பொறுத்திருந்து பார்க்கவேண்டுகின்றேன்.

தலைமையகம்
சென்னை-5
20-2-1984

அன்பன்
பெருஞ்சித்திரன்.
கழக முதல்வர் உ.த.மு.க.

பிழைக்கு வருந்துகிறோம்!

இவ்விதழின் 4-ஆம் பக்கத்தில் சில பிழைகள் கவனக் குறைவால் நேர்நது விட்டன. அன்பர்கள் திருத்திப் படிக்க வேண்டுகிறோம். **பிழை திருத்தம்.**

1. 'சாவுக்கஞ்சேம்'-பா :3 இனவுணர்வு-இனவுணர்வே
   ,, வரி 5. வழியின்றிப்பிச்சை-வழியின்றிஇரவல்.
   ,, பாட்டு 4. வரி. 7. காக - காகச்
2. பத்தி-2. வரி. 2. மணிக்கு - மணிக்குட்.
   ,, 3-ஆம்தீர்மானம்: ஓரளவினதாக-ஓரளவினவாக
3. பத்தி3. 6-ஆம்பத்தி:நரித்தனதாக-நரித்தனமாகத்.
   ,, 8-ஆம் பத்தி. பெரும்பான்மை-பெரும் பான்மை.
   ,, 10-ஆம் பத்தி. ஏராளமாக - ஏராளமாகக்.

உ.த.மு.க.வின் உயர்ந்தகொள்கைகள் :

- தூய்மையான தமிழ்மொழி முன்னேற்றம்
- சாதியற்ற, மதவேறுபாடற்ற சமநிலைக் குமுகாயம்.
- இழிவுகளும் பூசல்களும் ஏமாற்றும் இல்லாத அரசியல்
- தமிழ்த் தேசிய இனததிற்குப் பொருந்திய பொதுவுடைமைப் பொருளியல்.
- மனம, அறிவு, வாழ்க்கை -இவற்றை வளப்படுத்தவும் நலப்படுத்தவுமான அருவருப்பற்ற கலை வளர்ச்சி.
- பழந்தமிழ மரபுக்கும் மாந்தவியல சிறப்புக்கும் ஒத்த பண்பாட்டுப் பரிமாற்றம்.
எல்லாவற்றிலும் காலத்திற்கேற்ற அறிவியல் அணுகுமுறை.

கழக அருளாளர் : தென்மொழி நா. இளமாறன்
கழக அருட்கொடையாளர்கள்.
தென்மொழி ந.முத்துக்குமரன், பல்லடம் மா. ஆறுமுகம்

ஒவ்வொரு வெள்ளிக்கிழமைதோறும் வெளிவரும். பதிவு எண்: TN/MS/C)/657

அனுப்புதல்:
தமிழ் நிலம்
5. அருணாசலத் தெரு,
திருவல்லிக்கேணி,
சென்னை—5

பெறுநர்.
திரு/திருவாட்டி

நூல்-அஞ்சல்

உறுப்பினர்
ஆண்டுக்கட்டணம் உரு. 36-00
அரையாண்டுக் கட்டணம் உரு. 18-00

ஆசிரியரும், வெளியிடுபவரும்: பாவலரேறு பெருஞ்சித்திரனார்,
அச்சிடுவோர்: தென்மொழி அச்சகம், 5, அருணாசலத் தெரு, சென்னை-5.